பேராசிரியர்

# பூ. ஆலால சுந்தரனாரின்

# வாழ்க்கை வரலாறு


பதிப்பாசிரியர்

டாக்டர் க.த. திருநாவுக்கரசு



"சிவனகம்"

பேராசிரியர் குடியிருப்பு

தாம்பரம் (கிழக்கு)

சென்னை-59

தாம்பரம் கிறித்துவக் கல்லூரியின்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியரான

# பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

பதிப்பாசிரியர்
திருக்குறள்மணி
டாக்டர் க. த. திருநாவுக்கரசு

இணைப்பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-20

முதற் பதிப்பு : சனவரி 1982

நீத்தார் வழிபாட்டின் பொழுது
(24-1-1982) வெளியிடப்பட்டது

கிடைக்கும் இடம் :

1. **சிவனகம்,**
பேராசிரியர் குடியிருப்பு,
தாம்பரம் (கிழக்கு)
சென்னை-59.

2. **மு. அ. மாணிக்கவேலு,**
45, அருணாசலத் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை-2.

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

# பதிப்புரை

சிவநெறிச் செல்வர், பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரஞ்செட்டியார் அவர்களின் "தன் வரலாறுகிய" இவ் வாழ்க்கை வரலாற்றைப் பவழ விழாவில் வெளியிட எண்ணி இருந்தோம். ஆனல், இன்று கண்ணீருடன் இறைவனின் திருவடிகளில் இந்நூலைப் படைக்கின்றோம்.

'காலன் எனும் கண்ணிலி' செய்த கொடுஞ் செயலால் 'இனிக்கும் நினைவாக' இதயத்தில் இடம்பெற வேண்டிய இந்நிகழ்ச்சி, இரங்கல் உரையோடு இணைந்து விட்டது! 'அந்த நாளும் வந்திடாதோ?' என ஆவலோடு பவழ விழாவை எதிர்நோக்கி இருந்த எங்கள் எண்ணத்தில் இடி விழுந்து விட்டது! 'நெருநல் உளனொருவன் இன்றில்லை' எனும் பெருமையை மட்டும் உலகம் பெற்றுவிட்டது!

பேராசிரியரின் வாழ்க்கை முழுநிறைவான வாழ்க்கை! வளமும் நலமும் நிறைந்த வெற்றிமிகு வாழ்க்கை! அவருடைய வாழ்க்கையை 'ஒரு திறந்த புத்தகம்' எனலாம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இப்பெரியாரின் வாழ்க்கை உணர்த்தும் உண்மைகள் சிலவற்றை, இங்கு நினைவுகூறுவோமாக! கொள்கைக்கும் செயலுக்கும் இடையே இம்மியும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்த அறவோர் ஆலாலசுந்தரனர் என்பதை உலகம் நன்கறியும்! அவர் பல அரிய நூல்களை ஓதினர்; அவற்றின் அரும் பொருளை உணர்ந்தார்; அந்நூல்கள் காட்டிய நெறியில் 'ஆன்றவிந்து' அடங்கிய கொள்கைச் சான்றோராக வாழ முயன்றார்; முயற்சியில் வெற்றியும் பெற்றார்!

ஆடம்பர ஆரவாரத்தை விரும்பாத அறிஞர் ஆலால சுந்தரனர்! எளிமையும் இனிமையும் நிறைந்த பண்பாளராக

விளங்கியவர் நம் பேராசிரியர்! வியப்பூட்டும் ஒழுக்கசீலராக வாழ்ந்துகாட்டிய ஒப்பற்ற தமிழ்ப் பேராசிரியர் எனத் தமிழுலகம் என்றும் போற்றத்தக்க பெருந்தகையாளராக அவர் பொன்றுப் புகழ் பெற்றுள்ளார்!

இத்தகைய சிறப்பு இயல்புகள் வாய்ந்த பேராசிரியரின் தன் வரலாறு'கிய இந்த வாழ்க்கை வரலாற்றைப் பதிப்புக்கும் பணியைப் பெறும் பேருகக் கருதுகின்றேன்.

நம் பேராசிரியரின் பேரனும், பச்சையப்பன் கல்லூரியின் இளங்கலை வகுப்பில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பயிலும் மாணவருமான செல்வன் மு. அ. மாணிக்கவேலு, 'சோகம் நிறைந்த மழலை மொழியில்' ஒரு நல்ல 'முன்னுரையை' இந்நூலிற்கு வழங்கியுள்ளார்.

பேராசிரியரின் தலைமாணுக்கரும், அவருடைய சட்டகரின் திருமகனுமாகிய பேராசிரியர் திரு பெ. கு. உலகநாதன் M. A. M.Litt. (கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர்) அவர்கள், உள்ளத்தை நெகிழ்விக்கும் உணர்ச்சிப் பிழம்பான 'முகவுரையை' இந்நூலிற்கு அளித்துள்ளார்கள். இவ்விருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பேராசிரியர் ஆலாலசுந்தரனாரின், இச்சிறப்புமிகு 'வாழ்க்கை வரலாற்றை'ப் படிப்போர் எண்ணத்தில் எழுச்சியும், இதயத்தில் மலர்ச்சியும் அடைவரென நம்புகின்றேன்.

**க. த. திருநாவுக்கரசு**

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்னும் குறட்பாவிற்கேற்ப, வையத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்ந்து, புகழ்பெற்றவர் என் அருமைப் பாட்டனர் பேராசிரியர் பூரிப்பாக்கம் ஆலாலசுந்தரம் செட்டியார் ஆவர். அவர், தமிழை விரும்பிப் படிப்பவர்கள் இல்லாத காலத்தில் (ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்) தமிழைப் சிறப்புப்பாடமாகக் கொண்டு B.A. Hons படித்தார். தாய்மொழியாம் தமிழினைப் படித்ததன் மூலம், பல்வேறு துறைகளில் சீரும் சிறப்புமாகப் பணியாற்றினர். பெரிய நிலைகளில் பணியாற்றிய போதிலும், தம் நிலையிலிருந்து என்றும் அவர் தாழ்ந்தது இல்லை! தமிழ்ப் பண்பாட்டை மறந்ததும் இல்லை!

பேச்சுவன்மையிலும், சொல்லாற்றலிலும் சிறந்து விளங்கி, பற்பல பரிசுகளையும் பாராட்டுகளையும் அவர் பெற்றவராவர். ''ஈக'' என்றதும், ''ஈயேன்'' என்று அவர் சொன்னது இல்லை. அவர் எளிமையானவர்; மனிதாபிமானம் மிக்கவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் படைத்தவர்; இரக்க குணம் உள்ளவராகவும் இருந்தார்.

அவர் அன்னை மொழியாகிய தமிழில், எண்ணற்ற எழுத்துரைகளைப் படைத்துள்ளார். அவை சமய உணர்வைப் பரப்பின; இலக்கிய ஆர்வத்தை ஊட்டின; அனைவர் மனத்திலும் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் சிறப்பைப் பெற்றன.

''நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.''

என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப, பேராசிரியர் ஆலாலசுந்தரனார் நன்றி மறந்தவர் அல்லர். அதற்கு ஒரு நிகழ்ச்சியைச் சான்றாகக் காட்டலாம். பேராசிரியர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி ஏ. ஆனர்ஸ் வகுப்பில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்த பொழுது, அவருக்கு ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் உதவிச் சம்பளம் கிடைத்தது. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தம்முடைய "கட்டுரை விருந்து" என்னும் நூலினை, (அவருடைய மகனாகிய ராஜாசர். முத்தையா செட்டியார் அவர்களின் முன் அனுமதி பெற்று) ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்குக் காணிக்கையாக்கியுள்ளார்.

பேராசிரியர் அவர்களின் தந்தையார், பூரிப்பாக்கம் வேலு செட்டியார் அவர்கள், தம் பிள்ளைகள் இருவரும் சைவசமய நெறியில் உறுதியுடன் நிற்க வழிகாட்டினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் அவர்கள் படிக்கும் பொழுது, தில்லைச் சிற்றம்பலத்து நடராசப் பெருமானை வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் தரிசித்து வந்தார். இதனால் இறைவனது திருவருளை அவர் பேரளவிற்குப் பெற்றார்; ஆன்மிகவுணர்வுமிக்க பக்தராகச் சிறந்து விளங்கினார். அன்று முதல் இன்று வரை, சிதம்பரம் திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆனித்திருமஞ்சனத் திருவிழாவிற்கும், மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிற்கும் தவறாமல் சென்று வந்தார்; ஐம்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து சென்று, இறைவனை அவர் வழிபட்டுள்ளார். இந்நிகழ்ச்சி, அவருடைய சமயப்பற்றிற்கும் தில்லை நடராசப் பெருமானிடத்துக் கொண்ட முறுகிய பக்திக்கும் சிறந்ததொரு சான்றாகும்.

"நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின்! பாடிப் பணிமின்! பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே."

என்னும் திருமூலர் திருமந்திர முதுமொழிக்கு ஏற்பப் பாடல் பெற்ற திருத்தலங்களில், ஏறக்குறைய எல்லாவற்றையும் அவர் தரிசித்துப் பயன் பெற்றார் நெறியோடும் முறையோடும் பேராசிரியர் வாழ்ந்தார்; சமய உணர்வு மிக்கவராக விளங்கிய காரணத்தினால், வீட்டில் நாள்தோறும் "குடும்ப வழிபாடு" நடத்தி வந்தார்.

கண்பார்வைக் குறைவாகப் போன நேரத்திலும், பல ஆண்டுகளாக வெளியிடப்படாது இருந்த கந்தகோட்டத் தலவரலாற்றை, உரையுடன் அவர் எழுதினார்: கந்த கோட்டத்தைப் பற்றிய பாடல்களையும் அதனோடு இணைத்து, "கந்தகோட்டத் தலவரலாறும், திருப்பாடல்களும்" என்னும் நூலினை அவர் வெளியிட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கி யாதுமோர் குறைவிலை"

என்னும் திருஞானசம்பந்தர் திருமொழிக்கு இணங்க, யாதொரு குறையும் இல்லாமல் வையத்தில் வாழ்ந்து, இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் அவர் விளங்கினார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்னும் தெய்வப்புலவரின் வாய் மொழிக்கேற்பப் பேராசிரியர் செட்டியார் அவர்கள், புகழொடு வாழ்ந்தார். "தரிசனத்திற்கு முத்தித்" தலமாகப் போற்றப்படுவது சிதம்பரம். ஐம்பத்திரண்டாவது ஆண்டு திருவாதிரைத் திருநாள் தரிசனற்திற்குச் சிதம்பரத்தற்குச் சென்ற பொழுது, பேரருளாடலுன நடராசப் பெருமானின் திருவருள் பேற்றில் மூழ்கி அம்பலவாணரின் திருவடியைப் பேராசிரியர் அடைந்தார்.

தமிழ் இளங்கலை வகுப்பில் நான் படித்து வருகின்றேன். எனக்கு உறுதுணையாக அவர் இருப்பார் என்று நினைத்தேன். ஆனால், என்னுடைய நற்பேறின்மையால், அவ்வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. என்னுடைய ஈடுசெய்ய இயலாத இழப்பையும் ஆற்றுமையையும் அவருடைய "வாழ்க்கை வரலாற்றிற்கு" இம்முன்னுரை வரைவதன் மூலம் வெளிப்படுத்திக் கொள்ளுகிறேன். அவர் ஆன்மா அமைதி அடைய தில்லைக்கூத்தனை வேண்டி வணங்குகின்றேன்.

சென்னை.
20-1-1982

**மு. அ.மாணிக்கவேலு**

பேராசிரியர்

# பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் M.A.



தோற்றம்
5-11-1907

மறைவு
9-1-1982

"மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே?"

—புறநானூறு 165

வடிவேலும் மயிலும் துணை

# முகவுரை

தில்லை அருட்கூத்தனின் சேவடிக்கீழ் 'ஓங்கிய அன்புறு காதலை ஒழிவின்றிப் பெருக' வளர்த்துக் கொண்டு காக்கும் காவலனாகவும், காண்பரிய பேரொளியாகவும் திகழும் அவனுக்கல்லாது பிறர்க்கு எப்பணியும் செய்யாமலும், கங்குல் பகல் அவனைத் தவிர்த்துப் பிறரைக் காணாமலும் நல் வாழ்வு வாழ்ந்து, இவ்வாண்டு மார்கழித் திங்கள் மதி நிறைந்த ஆதிரை நன்னாளில் காண முத்தித்தரும் சிதம்பரத்தில், இறைவன் திருவடி நிழலை அடைந்த என் சிற்றப்பாவும் என் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரிய பேராசிரியப் பெருந்தகையும் ஆகிய திருவாளர் பூ. ஆலாலசுந்தரனார் அவர்களின் வாழ்க்கை தூய்மையும் வாய்மையும் நிறைந்ததாகும்.

தமிழ்ப் பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார் அவர்கள் சான்றாண்மைக்கு ஓர் ஆழி; ஒழுக்கத்தின் இமயம்; பண்பாட்டின் கொள்கலம்; பக்திக்கு வித்து: அன்பிற்கும் விருந்தோம்பலுக்கும் பேரரண். தமிழ் அறநூல்களிலும் பக்திப் பனுவல்களிலும் மொழியப்பட்டுள்ள கருத்துக்களை நாம் ஓதி உணர்வதோடு, அவற்றின் வழிநின்று வாழ்வில் கடைப் பிடிக்க வேண்டும் என்னும் கொள்கையுடையவர் அவர். ஆகையால் சொன்னதைச் செய்தவர்; பிறருக்கு ஓர் எடுத்துக் காட்டான முழுவாழ்வு வாழ்ந்தவர். தில்லை நடராசப் பெருமானது அருள்வலிமையை நன்கு பெற்றவர்.

நான் இன்று ஒரு தமிழ்ப் பேராசிரியன் என்ற தகுதி பெற்று வாழ்வதற்குக் காரணம், எனக்கு நற்றுணையாக இருந்து அவர் தந்த ஊக்கமேஆகும். சென்னைக் கிறித்தவக்

கல்லூரியில் நானும் பேராசிரியர் திரு. வே. கிருட்டிணசாமி. துணைப்பேராசிரியர் திரு. தி ரா. செல்வராசன், துணைப் பேராசிரியை திருவாட்டி. கிரேசு செல்வராசு ஆகிய மூவரும் எம். லிட்., பட்டம் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் எங்களை யெல்லாம் அப்பட்டம் பெறுவதற்கு அவர் மேற்பார்வை யாளராக இருந்து நெறிப்படுத்தியமையே ஆகும்.

கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற சில ஆண்டுகளுக்குப் பின்பு, அவர்தம் கண்களில் ஏற்பட்ட நீர் அழுத்த மிகை நோயால் (Gl-ucoma) இன்னலுற்றுப் பார்வை மங்கத் தொடங்கி, வீட்டிலேயே இருந்து வருந்திக் கொண்டிருந் தார். அவருடைய உறவினர்களும், நண்பர்களும் "நெஞ்சின் தூய்மையும் நேர்மையும் உடைய இவருக்கா இந்நிலை?" என்று வியப்புற்றனர். முந்திய பிறவியில் தாம் செய்த பாவத்தின் பயன் தானே தம்முடைய தற்போதைய பார்வை இழப்பு என்று அவர் என்னிடம் சொல்வார். நான் அதை நம்பாமல், "அவர் வாழ்த்தி வணங்கி வழிபடும் தெய்வம் இப்படியும் செய்யுமோ?" என்று தெய்வ அருள் பற்றிக்கூட ஐயுற்றதுண்டு.

அவர் மறைவிற்கு ஒரு திங்கள் முன்பு, ஒருநாள் "உங்க ளால் கோயிலுக்குச் செல்லாமல் இருப்பது இயலாத ஒன்று ஆயிற்றே?" என்று நான் வினவியபோது, "முன்பு எப் பொழுதும்விட இப்போது வீட்டிலேயே இருந்து கொண்டு நடராசப் பெருமானது அருட்சீரை நினைந்து நினைந்து உருகும் வாய்ப்பை நிறையப் பெற்றுள்ளேன்" என்று அவர் மறுமொழி பகர்ந்தார். அப்பொழுதுதான் அவருக்கு ஏற் பட்ட பார்வை இழப்புக்கூட, அவரை ஆட்கொள்வதற்காக என உணர்ந்தேன். அவர் இல்லத்திலேயே வழிபாடு செய்ய எழுந்தருளி தில்லை நடராசப்பெருமான் செய்த அருள் விளையாட்டு என்னும் நன்மையைப் புரிந்து கொண்டேன்.

கல்வி மட்டும் நிறைந்து, நல்லொழுக்கம் இல்லாதவர் அறிவிலார் ஆவார். ஆகவே, அத்தகையவர் மொழியும் வாய்ச்சொற்களைக் கேட்காமல், நல்லொழுக்கம் உடைய கற்றறிந்தோர் மொழிகளைக் கேட்பதே வழுக்கும் சேற்றில் வழுக்காது தடுக்கும் ஊன்றுகோல் போன்று உதவும் என்பதை,

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்

என்ற திருக்குறள் உணர்த்தும். உயர்ந்த கல்வியும், ஓங்கிய ஒழுக்கமும் கொண்டு அறிவின் ஞாயிறுகத் திகழ்ந்த என் பேராசிரியராகிய ஊன்றுகோலை இழந்து, நான் தவிக்கின்றேன். இத்தகைய உற்றுழி உதவும் ஊன்றுகோலாக இனி யார் எனக்கு அமையப் போகிறுர்கள்? பேராசிரியர். பூ. ஆலாலசுந்தரனாரின் ஆன்மா அமைதி அடைய ஆண்டவன் திருவருளை வேண்டுகின்றேன்.

பேராசிரியர் அவர்கள் தாமே எழுதிய சுயவரலாறு, அவர் வாழ்வில் போற்றிய கொள்கைத் திட்பத்தையும் நற்குண நற்செய்கைகளையும் தெள்ளத்தெளிவாக விளக்குகின்றது. ''சுடர் விளக்கு'' என்ருலும் அதற்கு ஒரு தூண்டுகோள் வேண்டுமன்ருே? இச்சுயவரலாறு உருவாகக் காரணமாக இருந்தவர் அன்பும் பண்பும் நிறைந்த நண்பர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு ஆவார். பூ. ஆலாலசுந்தரனாரின் உள்ளத்தையும் உணர்வையும் நன்கு உணர்ந்த சான்ருேர் பலருள் அவரும் ஒருவராவார்.

'சான்ருேர்'
சான்ருேர் பாலர் ஆப

என்பது பிசிராந்தையாரின் வாக்கு. வாழ்க நம் பேராசிரியரின் தமிழ்த் தொண்டு!

சென்னை
20-1-82

பெ. கு. உலகநாதன்,

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | 1 |
| 2. | ஆசிரியப்பணி | 17 |
| 3. | பேராசிரியர் | 22 |
| 4. | சென்னைப் பல்கலைக்கழகத் தொடர்பு | 27 |
| 5. | பிறபணிகள் | 37 |
| 6. | பொதுநலத் தொண்டு | 50 |
| 7. | குடும்பம் | 65 |

## தோற்றம்

நான் 1907-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5-ஆம் நாள், பிலவங்க வருடம் ஐப்பசி மாதம் செவ்வாய்க்கிழமை, 20 ஆம் தேதி, சுவாதி நட்சத்திரத்தில், சென்னை, முத்தியாலுப் பேட்டை லிங்கிசெட்டித் தெருவில், என் பெற்றோருக்கு ஆருவது குழந்தையாகப் பிறந்தேன், ஆருவதாகப் பிறந்த ஆண் குழந்தை ''ஆனைக்கட்டி வாழும்'' என்பது பழமொழி.

## பெற்ரோர்

என் தந்தையார் பெயர் பூரிப்பாக்கம் வேலு செட்டியார்; தாயார் பெயர் இராஜம்மாள். தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்கள் முப்பத் திரண்டில், திருக்கள்ளில் என்பது ஒன்ருகும். அது செங்கை மாவட்டம் பெரியபாளையத்திற்கு அடுத்த கன்னிப் புத்தூருக்கு அருகில் உள்ளது. பூரிப்பாக்கம் என்பது திருக் கள்ளிலுக்கு அடுத்துள்ள சிற்றூர். என் தந்தையாரின் பாட்டஞர் அவர்கள் சென்னையில் வந்து குடிபுகுந்தார். என் தந்தையார் பூ. வேலு செட்டியார் சென்னை அரசாங்க கலெக்டர் அலுவலகத்தில் கணக்காளராக (Accountant) பணியாற்றி வந்தார்.

அவர் சென்னை முத்தியாலுப்பேட்டை ஸ்ரீமல்லிகேசுவரர் ஆலய திருத்தொண்டர் சபையின் ஓர் உறுப்பினராக இருந் தார். அவர் சைவ சமய நூல்களையும், சைவ சித்தாந்த

சாத்திரங்களையும், பிற நூல்களையும் நன்கு படித்து, அவற்றைக் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார், பூவை. கலியாணசுந்தர முதலியார், கி. குப்புசாமி முதலியார், காஞ்சிபுரம் ஆலால சுந்தரம்பிள்ளை முதலிய அறிஞர் பெருமக்களிடத்துப் பாடம் கேட்டார். தம் ஆசிரியரின் பெயரை நினைவூட்ட வேண்டும் என்ற காரணத்தினாலும், சைவ சமயாசாரியர்களுள் ஒருவரான ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் முத்தி அடைந்தது சுவாதி நட்சத்திரம் ஆனதாலும், நான் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்ததாலும், என் தந்தையார் எனக்கு ஆலாலசுந்தரம் என்ற பெயர் வைத்தார். ஸ்ரீ மல்லிகேசுவரர் திருத்தொண்டர் சபையின் சார்பில், சபையின் உறுப்பினர்களோடு சேர்ந்து, சைவ சமய குரவர் நால்வர், அறுபான் மூவர் முதலிய நாயன்மார்களின் திரு நட்சத்திரங்களைக் கொண்டாடுவதிலும், தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களைத் தரிசிப்பதிலும், பன்னிரு திருமுறைகளைப் பண்முறையோடு ஓதுவதிலும், நாள்தோறும் திருக்கோயிலுக்குப் பூத்தொடுத்துக் கொடுப்பதிலும் அவர் ஈடுபட்டு இருந்தார்.

## உயர்நிலைப் பள்ளி வாழ்க்கை

சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில், 1917-ஆம் ஆண்டு முதல் 1927-ஆம் ஆண்டு வரை நான் படித்தேன். 1927-ஆம் ஆண்டு எஸ். எஸ். எல். சி- தேர்வில் வெற்றி பெற்றேன். 10-ஆம் வகுப்பில் படிக்கும் பொழுது, வரலாறும், சிறப்புத் தமிழும் எனக்குச் சிறப்புப் பாடங்களாக அமைந்தன. எங்கள் தலைமையாசிரியர் திரு. சீதாபதி நாயுடு என்பவர் மிக்க அன்புடன் மாணவர்களோடு பழகி வந்தார். எங்களுக்குத் திரு. சிவ. தணிகாசலம் பிள்ளை, திரு. மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார், திரு. பி. சதாசிவ நாயக்கர் முதலியோர் தமிழாசிரியர்களாக

விளங்கினர். சிவ. தணிகாசலம் பிள்ளை என்பவர் திருஅருட் பிரகாச வள்ளலார் எனப்படும் இராமலிங்க அடிகளாரின் உறவு முறை உடையவர்; நன்ருகவும், விளக்கமாகவும், பாடம் சொல்லும் திறனைப் பெற்றவர். மயிலை. சிவ. முத்துக் குமாரசுவாமி முதலியார் எங்களுக்குத் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் பொழுது, பல திருப்பாடல்களை இசையுடன் பாடுவது வழக்கம்.

மாணவர்கள் பல தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற கருத்தினுல், ஞாயிறு தோறும் திருக்குறள் வகுப்புகளை அவர் நடத்தி வந்தார். அவரது அன்பின் பயனுல், நான் பல திருக்குறள் பாக்களை மனப்பாடம் செய்தேன். பள்ளியில் தமிழ்மொழியில் நடைபெற்ற கட்டுரைப் போட்டி, சொல் வன்மைப் போட்டி, இன்னிசைப் போட்டி முதலிய போட்டி களில் நான் கலந்து கொண்டு, பல பரிசுகள் பெற்றேன். ஆங்கிலச் செய்யுட்களை மெய்ப்பாடுடன் பாடுவதிலும் பரிசு பெற்றேன்; பள்ளி நாடகங்களிலும் கலந்து கொண்டேன்.

திரு சோமதேவ சர்மா என்பவர் எங்களுக்கு நீதி, மத போதக ஆசிரியராக விளங்கினுர். அவர் எங்களுக்குத் தேவாரம், திருவாய்மொழி முதலிய பக்திப் பாடல்களையும், விநாயகர். முருகன், சிவபெருமான், சக்தி, திருமால் முதலிய கடவுளரைப் பற்றிய வடமொழி ஸ்லோகங்களையும் மனப் பாடம் பண்ணும்படி செய்தார். மாணவர்கள் சமய உணர் வோடு வாழவும், சமய நெறியோடு பழகவும் வேண்டும் என்பது அவரது விருப்பம். அக்காலத்தில் பள்ளி மாணவர் களாகிய நாங்கள் தலையில் தொப்பி அணிந்து போவது வழக்கம் மாணவர்கள் சமய சின்னமாகிய விபூதி, நாமம் ஆகியவற்றுள் ஒன்றை நெற்றியில் அணிந்து வராவிடில், திரு. சர்மா அவர்கள் அம்மாணவர் தொப்பியின் மேல், சாக்குத் துண்டில் 'மு' என்று எழுதுவார். அதாவது சமய சின்னம் அணிந்து கொள்ளாதவன் ''முட்டாள்'' என்பது அவரது

கருத்து. இக்காலத்தில் எந்த ஆசிரியரேனும் இவ்வாறு செய்ய முற்படுவாரா? என்பதும், அதை மாணவர்கள் ஏற்றுக் கொள்வாரா? என்பதும் ஆராய்ச்சிக்குரியது. சென்னை நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற திரு. ஆர். சதாசிவம் அவர்கள், இக்காலத்தில் சிறப்புமிகு மருத்துவராக விளங்கும் திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் முதலிய பல பெருமக்கள் அக்காலத்து, அப்பள்ளியில், நான் படிக்கும் காலத்தில் படித்துவந்தனர்.

## கல்லூரி வாழ்க்கை

1927 முதல் 1929 வரை, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'இண்டர்மீடியட்' வகுப்பில் நான் படித்தேன். அக்கல்லூரியில் படிக்கும் பொழுது, எனக்கு உபகார சம்பளமும் (Scholarship) கிடைத்தது. அப்பொழுது 'இண்டர்' முதல் ஆண்டில், திரு எம். இரத்தினசாமி எம்.ஏ., பாரட்லா. என்பவர் எங்கள் கல்லூரி முதல்வராகவும், இரண்டாம் ஆண்டில் திரு. சின்னதம்பிப்பிள்ளை அவர்கள் கல்லூரி முதல்வராகவும் விளங்கினர்.

ஆங்கிலப் பாடத்துறையில் பணியாற்றிய திரு. யக்ஞ நாராயண அய்யர், திரு. சுப்பிரமணிய அய்யர், திரு. ஆர் கிருஷ்ணமூர்த்தி, திரு. வேங்கடசாமி முதலியோர் எங்களுக்கு ஆங்கிலப்பாடம் கற்பித்தனர். தமிழ்த்துறையில் பணி யாற்றிய திரு. மோசூர் கந்தசாமி முதலியார், திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் ஆகிய இருவரும் எங்களுக்குத் தமிழ்ப்பாடம் கற்பித்தனர். மோசூர் ஆர். கந்தசாமி முதலியார் அவர்கள் தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும், தத்துவத்திலும் புலமை மிக்கவராக விளங்கினர். ஒரு முறை, மணிமேகலையில் அமைந்துள்ள தத்துவ உண்மைகளைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு மணி நேரம் அவர் விரிவுரை யாற்றியது எங்களை வியப்படையச் செய்தது.

1924ஆம் ஆண்டில், திரு. முத்தய்யா செட்டியார் என்பவர் திருவருட் பிரகாச வள்ளலார் பாடியருளிய ஏறக் குறைய 1000 பக்கங்கள் அடங்கிய திருவருட்பா முழுமையும் அச்சிட்டு, கற்றேருக்கும், மற்றேருக்கும் இலவசமாக வழங்கினர். இப்பதிப்பு வெளிவருவதற்குத் திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் மிகவும் துணை புரிந்தார். திரு. பூண்டி. அரங்கநாத முதலியார் அவர்கள் இயற்றிய கச்சிக்கலம் பகத்திற்கு மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள், சிறந்த உரை எழுதி வெளியிட்டார்கள்.

திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் மறைமலையடிகளின் மாணவர். அவர் தமிழில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் அக்காலத்தில் விளங்கினர். அவர், புலவர் கதை முதலிய நூல்களை இயற்றினர். சிவஞானபோதம் என்ற சித்தாந்த சாத்திரத்தை சிவதீட்சை பெற்றவர்தான் படிக்க வேண்டும் என்ற ஒரு மரபு அக்காலத்தில் இருந்தது. இவ்வாறு சட்டத்திட்டங்கள் அமைத்தால் பலரும் படிக்க இயலாது என்ற கருத்தினுல் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், மிக்க முற்போக்குடன் வாரந்தோறும் சிவஞானபோத வகுப்பினை வைத்து நடத்தினர்கள். நானும், என் நண்பர் திரு. அ. கி. பரந்தாமனும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் செயலாளர்களாகப் பணியாற்றினேம். அறிஞர் அண்ணு அவர்கள், திரு. அப்பாண்டை ராஜன் (Registrar of Co-operative Society), பி. நடேசன் (Sub-Judge) முதலியோர் அக்காலத்தில் அக்கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் என்னேடு படித்தனர்.

அறிஞர் அண்ணு அவர்கள் என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பராவார். சென்னை கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவனுக நான் இருந்த பொழுது, அறிஞர்

அண்ணு அவர்கள் எங்கள் கல்லூரிக்குச் சொற்பொழிவாற்ற வரும்போதெல்லாம், சொற்பொழிவு முடிந்தவுடன் எனது இல்லத்திற்கு வந்து, சிற்றுண்டி அருந்தி பல மணி நேரங்கள் அளவளாவிச் செல்வதுண்டு. இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1968-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த பொழுது, தமிழகப் புலவர் குழுவினர் மேல் நாட்டறிஞர் குழுவினருக்கு 49 புலவர்கள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய ''Tamilology'' என்ற கட்டுரை மலரினை வழங்கினர். அக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலைமை தாங்கிஞர்கள். அப்பொழுது, நானும் புலவர் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தேன். அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த அறிஞர் அண்ணு அவர்கள், தமது தலைமைப் பேருரையில் தாம் படித்த பச்சையப்பன் கல்லூரியில், அக் காலத்தில் பணியாற்றிய பேராசிரியப் பெருமக்களின் புலமை நலன்களையெல்லாம் எடுத்துக்கூறி, ''நான் சொல்வதில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், என்னுடன் ஒன்ருகப் படித்த பூ. ஆலால சுந்தரனுரைக் கேட்டுப் பாருங்கள்'' என்று கூறியது, அண்ணு அவர்கள் என்பால் கொண்டிருந்த நட்பினை எடுத்துக் காட்டுவதாகும்.

அறிஞர் அண்ணு அவர்கள் என்னிடம் வைத்திருந்த பேரன்பிற்கு மற்ருெரு சான்று கூற விழைகின்றேன். அண்ணு எழுதிய ''அபாய அறிவிப்பு'' என்ற நூல் 1962-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அந்நூலின் ஆரும் பக்கத்தில், அறிஞர் அண்ணு அவர்கள் என்னைப் பற்றிக் கூறியுள்ள கீழ்க்காணும் வரிகளை இவண் குறிப்பிட விரும்புகின்றேன். ''என்னிடம் ஒருவர் வந்து, நான் கிறித்துவக் கல்லூரி மாணவன் என்று கூறிஞல், அக் கல்லூரியின் கல்வியைக் குறித்தும், ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் முறையைக் குறித்தும் அவரிடம் கேட்பேன். 'நான் தாம்பரத்தில் வாழ்பவன்' என்று அவர் சொன்னுல், தாம்பரத்தைப் பற்றிச் சில விஷயங்கள் விசாரிப்பேன்; என் நண்பர்

ஆலாலசுந்தரம் அவர்களுக்கு வேண்டியவர் என்று ஒருவர் சொன்னால், அவர் எப்படி இருக்கிறார்? என்று கேட்பேன்; ஆனால், அவர் 'நான் ஆலாலசுந்தரனாரின் மகன்' என்று சொன்னால், கட்டித் தழுவி முத்தமிட்டு, உச்சிமோந்து, 'அப்பா சௌக்கியமா கண்ணு' என்றுதான் கேட்பேன்'' என்று தெரிவித்துள்ளார்.

பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சில போட்டிகளில்-விகடப்போட்டியில் எனக்குப் பரிசு கிடைத்தது. நான் பச்சையப்பன் கல்லூரியில் 'இண்டர்மீடியட்' படித்து, பல்கலைக் கழகத் தேர்வில் வெற்றி பெற்றேன். பின்னர், அதே கல்லூரியில் பி.ஏ. (இளங்கலை) Branch V தமிழ்ச்சிறப்பு வகுப்பில் படிக்க விரும்பி, கல்லூரி முதல்வரை அப்பிரிவினை அக்கல்லூரியில் தொடங்கும்படிக் கேட்டுக்கொண்டேன். அவர் ஆறு மாணவர்கள் அப்பிரிவில் சேர்ந்து படிக்க விரும்பினால் தான், அப்பிரிவினைத் தொடங்கலாம் என்றார். அது பற்றி நான் சில மாணவர்களைக் கேட்டேன். இரு மாணவர்தான், அப்பிரிவில் சேர இசைந்தனர். பி ஏ. வகுப்பில் சிறப்புத்தமிழ் எடுத்துப் படிப்பது இழுக்கென்று அக்காலத்தில் பல மாணவர்கள் கருதியதுண்டு. பி. ஏ. Group V-ல் ஆறு மாணவர்கள் சேராமையால், அப்பிரிவு தொடங்கப்படவில்லை.

எனவே, அக்கல்லூரி முதல்வர் திரு. சின்னதம்பிப்பிள்ளை அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்ஸ் (தமிழ்) வகுப்பில் சேர்ந்து படிக்கும்படி எனக்கு அறிவுரை கூறி, சில பரிந்துரைக் கடிதங்களும் கொடுத்து, ஆசி கூறினார்.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

1931-ஆம் ஆண்டு ஜூன் திங்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பி.ஏ. ஆனர்ஸ் [Branch VI (Tamil Literature)] வகுப்பு தொடங்கப்பட்டது. அப்பொழுது சென்னை மாநகர நகராண்மைக் கழக உறுப்பினராக இருந்த திரு.

டி. எஸ். நடராச பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் நான் அவ்வகுப்பில் சேருவதற்கு, ராஜாசர். எம். ஏ. முத்தய்யா செட்டியார் அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தும் முகத்தான், ஒரு பரிந்துரைக் கடிதமும் வழங்கினர்.

அக்கடிதத்தைக் கண்ட ராஜாசர் எம். ஏ. முத்தய்யா செட்டியார் அவர்கள், என்மீது அன்பு கூர்ந்து, நான் சிறப்புத் தமிழ் படிக்க வருவதைப் பாராட்டி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேருவதற்கு வேண்டிய உதவிகள் செய்தார். எனக்கு ராஜாசர் அண்ணாமலை செட்டியார் உபகார சம்பளமும் (Raja's Scholarship) அளிக்கப்பட்டது. அப்பொழுது சர். S. E. ரங்கநாதம் எம். ஏ; ஐ. இ. எஸ். அவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தார்.

1931-32ஆம் ஆண்டில் III பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் நாங்கள் மூன்று மாணவர்கள் படித்தோம். அடுத்த ஆண்டில் (1932-33) நான்கு பி. ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் எங்களோடு முதுகலை மாணவர்களாக (Post-Graduate) வந்து சேர்ந்தனர். எனவே, 1934-ஆம் ஆண்டில் நாங்கள் ஏழு பேரும் B. A. Hons. Tamil Literature தேர்வு எழுதி, சிறப்பாக வெற்றி பெற்ருேம். அதன் வாயிலாக 1935 ஆம் ஆண்டில் எம். ஏ. பட்டம் பெற்றேன். 1933-ஆம் ஆண்டில், 1935-ஆம் ஆண்டுத் தமிழ் எம்.ஏ. தேர்வு எழுதுவதற்காக ஏழு மாணவர்கள் சேர்ந்தார்கள். அவர்களுள் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், திரு. எஸ். ஆறுமுக முதலியார் முதலியோர் குறிப்பிடத் தக்கவராவர். நாங்களும் IV ஆனர்ஸ் மாணவர்களும் ஒன்று சேர்ந்து சில வகுப்புகளில் ஒன்ருகப் படிக்க வேண்டியிருந்தது.

1932 ஆம் ஆண்டில், நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் செயலாளனுகத் தேர்ந்தெடுக்கப்பட்

டேன். ஒரு கூட்டத்தில் கரந்தை தமிழ்ச் சங்கத்தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், அப்பொழுது கல்வி அமைச்சர் ஆக இருந்த திவான்பகதூர் குமாரசுவாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் அப்பல்கலைக் கழக வளர்ச்சிபற்றி ஆற்றிய சொற்பொழிவு எங்களால் என்றும் மறக்க இயலாது. 1932 33ஆம் ஆண்டில் அண்ணு மலைப் பல்கலைக் கழகப் பேரவையின் (University Union) இரண்டாம் பருவத் தலைவனுக நான் தேர்ந்தெடுக்கப் பட்டேன். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த ராஜாசர் அண்ணுமலை செட்டியார் அவர்களின் பிறந்தநாள் விழா (Founder's Day) மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது அதன் சார்பாகப் பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தமிழில் சொல்வன்மைப் போட்டி, கட்டுரைப் போட்டி முதலிய போட்டிகள் நடைபெற்றன. சொல்வன்மைப் போட்டியில் எனக்கு முதற்பரிசும், கட்டுரை போட்டியில் திரு. எஸ். ஆறுமுக முதலியாருக்கு முதற் பரிசும் அளித்தார்கள்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற திரு. எஸ். மகராஜன் அவர்கள் அப்பொழுது பி. எஸ்சி வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தார் அவர் அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆங்கிலப் பேரவையின் முதல் பருவத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியராக இருந்த திரு. சி. ஆர். மயிலேறு என்பவர், பிரெஞ்சு ஆசிரியர் திரு. மோலியர் (Molier) எழுதிய "Doctor inspite of himself" என்ற நாடகத்தை "தான் விரும்பாமலே தன்வந்தரி" எனத் தமிழில் மொழி பெயர்த்தார். அந்த நாடகத்தில், நான் கதாநாயகனுக நடித் தேன். நான் மிகச் சிறப்பாக நடித்ததால், முதற்பரிசாகிய துணைவேந்தர் பெயரிலுள்ள, வெள்ளிப்பதக்கம் (Vice-Chancellor's Medal) எனக்கு அளிக்கப்பட்டது.

விக்கிரமாதித்தன் அரச அவையில் நவரத்தினம் என வழங்கப்பட்ட காளிதாசன் போன்ற 9 புலவர்கள் இருந்தது போல, ராஜாசர். அண்ணாமலை செட்டியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நவரத்தினம் போன்ற 9 பேராசிரியர்கள் எங்களுக்குக் கல்வி புகட்டினர். சுவாமி விபுலானந்தர், நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், டாக்டர் ரா. பி சேதுப்பிள்ளை, மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், சேது சமஸ்தான வித்துவான் சர்க்கரை இராமசுவாமிப் புலவர், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த புலவர் பொன். ஓதுவார், சோழவந்தான் கந்தசாமியார், வரலாற்றாசிரியர் திரு. எஸ். கே. கோவிந்தசாமிப்பிள்ளை ஆகிய ஒன்பதின்மரும் எங்களுக்குப் பேராசிரியர்களாக விளங்கினர்.

சுவாமி விபுலானந்தர் என்பவர், நான் பி. ஏ. ஆனர்ஸ் முதல் வகுப்பில் படித்த பொழுது, எங்களுக்குத் தமிழ்த் துறைத்தலைவராக விளங்கினார். அவர்களுடைய அறவுரையின் படி, மாணவர்களாகிய நாங்கள் திருவேட்களம் அரிசன காலனிக்குச் சென்று, அங்குள்ள மாணவர்களுக்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தினோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உள்ள அண்ணாமலை நகர்ப் பக்கத்தில், திருவேட்களம் என்ற தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் உள்ளது. சிவபெருமான் அர்ச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்த ஐதீகம் ஆண்டு தோறும் இத்திருக்கோயிலில் நடைபெறுகின்றது. இத்தலத்தினைப் போற்றி அப்பர் பாடிய தேவாரமும், அருணகிரி நாதர் பாடிய திருப்புகழும் உள்ளன.

நான் நான்காம் ஆனர்ஸ் வகுப்புப் படிக்கும் பொழுது மாணவர்களாகிய நாங்கள் பலர் ஒன்றுகூடி, அத்திருக் கோயிலில் அபிஷேகம் செய்வித்தோம். எங்கள் பேராசிரியர்

எல்லாரும், அன்று அத்திருக்கோயிலுக்கு வந்திருந்தனர். விபுலானந்த அடிகளார் பல ஆண்டு ஆராய்ச்சி செய்து ''யாழ்நூல்'' என்ற அரிய நூலினை வெளியிட்டார். அவர் ''மதங்க சூளாமணி'' என்ற நாடக ஆராய்ச்சி நூலும் இயற்றினர். நான்காம் ஆனர்ஸ் வகுப்பில் படிக்கும்பொழுது, டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தார். அவர் 'சேரர் தாயமுறை'' ,,தயரதன் குறையும், கைகேசி நிறையும்'', 'மாரிவாயில்' முதலிய பல நூல்களை இயற்றியதோடு, தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு ஒரு புத்துரையும் அளித்துச் சென்றார். சிறந்த வழக்கறிஞராக விளங்கிய அவர், தம் வழக்கறிஞர் தொழிலைவிட்டு, தமிழ் மொழிக்கு ஆற்றிய அருந்தொண்டு சாலவும் பாராட்டத்தக்கது. அவர் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரோடு ஒன்றாகப் பழகியவர்.

சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எங்களுக்கு மொழிநூலும், கம்பராமாயணமும் நடத்தினர். அவர் ''வீரமாநகர், பன்னிரு கட்டுரை, ஊரும் பேரும்,The words and theirSignificance'' முதலிய பல நூல்கள் இயற்றினர். வகுப்பில் ஆறுபேர் இருந்தாலும், அறுபது பேர் இருந்தாலும், அவரது சொற்பொழிவு ஒரே நிலையில் தான் அமைந்திருக்கும்.

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்அவர்கள் வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிகுந்து விளங்கினர். தமிழில் பல கட்டுரை நூல்கள் வெளியிட்டதோடு, ''மிருச்சகடிகம்'' என்ற வடமொழி நாடகத்தை ''மண்ணியல் சிறுதேர்'' என்ற தலைப்பில், அவர் மொழி பெயர்த்தார். வடமொழியில் கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம் என்ற நூலை ''பொருள் நூல்'' என்ற தலைப்பில், தமிழில் அவர் மொழி

பெயர்த்தார். திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்னும் பகுதிகளுக்குக் 'கதிர்மணி விளக்கம்'' என்ற தலைப்பில், ஆராய்ச்சியும், நயமும் பொருந்திய அரிய உரை எழுதியுள்ளார்கள்.

திரு. ந. மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள் திருவிளையாடல் புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களுக்கு உரை எழுதினார்கள். மற்றும் கட்டுரைத் திரட்டு, நக்கீரர், கபிலர் போன்ற ஆராய்ச்சி நூல்களையும் அவர் எழுதியுள்ளார். சர்க்கரை இராமசுவாமிப்புலவர், சேதுசமஸ்தானப் புலவராக விளங்கினார். அவர் பல புராணங்களையும், இலக்கிய, இலக்கண நூல்களையும் கற்றவர். தமிழில் அரிய செய்யுள்கள் இயற்றுவதில் வல்லமை மிக்கவர். திருவாவடு துறை ஆதீனத்தைச் சேர்ந்த பொன். ஓதுவார் அவர்கள், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும், பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களையும் நன்கு பயின்றவர்.

சோழவந்தான் கந்தசாமியார் அவர்கள் அரசன் சண்முகனாரிடத்து இலக்கண, இலக்கியம் பயின்றவர். தொல்காப்பியத்தை உரைகளோடு ஒப்பிக்கும் நினைவாற்றல் மிக்கவர். அவரைக் கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் உரைகளோடு வெளியிட்டனர். எங்களுக்கு வரலாற்றாசிரியராக விளங்கிய திரு. எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் தமிழிலக்கியப் புலமையோடும், கல்வெட்டு, வரலாறு, முதலியவற்றில் ஆராய்ச்சித் திறமையோடும் விளங்கினார். தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள ஓவியங்களை முதன் முதலாகக் கண்டுபிடித்து வெளிப்படுத்திய பெருமை அன்னாருக்கே உரியதாகும். சிறந்த வரலாற்றாசிரியராக விளங்கிய திரு. நீலகண்ட சாஸ்திரியார், தாம் எழுதிய நூலில், திரு.

கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் கூறியுள்ள சில கருத்துக்களைத் தாம் முற்றிலும் ஏற்றுக்கொள்ள இயலாது என்ற கருத்தில், "I wish to differ from Prof. S K. Govinda swamy Pillai on certain points" என எழுதியுள்ளது. திரு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களின் புலமை நலத்தை விளக்கப் போதிய சான்றாக அமைந்துள்ளது. இத்தகைய புலமை மிக்க பேராசிரியர்களிடத்துப் படிக்கும் பேறு பெற்றமைக்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

டாக்டர் சோமசுந்தர பாரதியார், டாக்டர் ரா. பி சேதுப்பிள்ளை, மகாமகோபாத்தியாய பண்டித மு. கதிரேசன் செட்டியார் ஆகிய முப்பெரும் பேராசிரியப் பெருமக்களும், 1947-ல் நான் எழுதிய ' கட்டுரை விருந்து'' என்ற நூலுக்கு அணிந்துரை தந்து, எனக்கு ஆசி கூறியது, அன்னார் என்பால் வைத்த மாறா அன்பினை எடுத்துக்காட்டுவதாகும். நான் அங்குப் படிக்கும் பொழுது, அண்ணாமலை அரசரின் உபகாரச் சம்பளம் பெற்றேன். எனவே, என் நன்றியைத் தெரிவிக்கும் முகத்தான், 1947-ஆம் ஆண்டில், நான் வெளியிட்ட "கட்டுரை விருந்து'' என்ற என் நூலினை ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு உரிமைப்படுத்தினேன். அந்நூல் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்கள் பெரும்பாலானவற்றில் இண்டர்மீடியட், பி. யு. சி. வகுப்புகளுக்குப் பாடமாக அமைந்தது. இவையெல்லாம் திருவருட் செயலே.

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பொழுது, வெள்ளிக்கிழமை தோறும் சிதம்பரத்தில் உள்ள ஸ்ரீ சபாநாயகர் கோவிலுக்குச் சென்று, ஆறு மணிக்கு நடைபெறும் மாலை பூசையைத் தரிசிப்பதுண்டு. ஒரு முறை, நான் சிறிதுகாலம் தாழ்த்திச் சென்றதால், மாலை பூசையை என்னால் தரிசிக்க இயலவில்லை. அதற்கடுத்த பூசை இரவு 8 மணிக்கு நடைபெறும். மாலை பூசையைத் தரிசிக்கத்

தவறியதால், 8 மணிக்கு நடைபெறும் பூசையைத் தரிசிக்கலாமா? அல்லதுஉடனே வீடு திரும்பலாமா? என எண்ணினேன். ஏனெனில், அக்காலத்தில் சிதம்பரத்தில் வீதிகளில் மண்ணெண்ணெய் விளக்குத்தான் எரியும். எங்கும் இருள் சூழ்ந்திருக்கும். சிதம்பரம் கோவிலுக்கும், புகைவண்டி நிலையத்திற்கும் ஒரு மைல் உண்டு. அங்கிருந்து கிழக்கே ¾ மைல் தூரம் சென்றால்தான், அண்ணாமலை நகரை அடையலாம். கோஷன் ரோட்டில் கொஞ்சதூரம் நடந்து சென்று சிவபுரிக்குப் போகும் வீதி தொடக்கத்தில்தான், மின்சார விளக்குகள் உண்டு. இருட்டில் எப்படிச் செல்வது? என்று முதலில் தயங்கினேன். பிறகு, போகும் பொழுது, தேவாரம் சொல்லிக்கொண்டே போகலாம் என உறுதி கொண்டேன். 8 மணிக்கு நடக்கும் பூசையைத் தரிசித்துவிட்டு, சிதம்பரம் இரயிலடிக்குப் புறப்பட்டேன். போகும் வழியில், இருவர் தம் தலையில் காந்தவிளக்கு (Gas light) சுமந்து கொண்டு சென்றனர். அவர்களை நோக்கி, 'அவர்கள் எங்குச் செல்கிறார்கள்?' எனக் கேட்டேன். அவர்கள் ''சிவபுரியில் நடைபெறும் திருமணத்திற்கு எடுத்துச் செல்வதாக'க் கூறினர். எனக்குச் சிவபுரி பாதை வரைதான் வெளிச்சம் வேண்டியிருந்தது. அந்த இருவரும் எனக்கு வெளிச்சம் அளித்ததோடு, என்னுடன் பேசிக் கொண்டும் வந்தனர். இந்நிகழ்ச்சி ஸ்ரீநடராசப் பெருமான் திருவருளே என நினைத்து, தில்லை அம்பலவாணரின் திருவருளைப் பாராட்டினேன்.

தில்லை அம்பலவாணரின் திருவருளுக்கு மற்றொரு சான்று கூற விழைகின்றேன். ஒருமுறை என்னுடன் அண்ணாமலை நகரில் வசித்து வந்த என் தந்தையார், ஒரு கார்த்திகை சோமவாரத்தில் திருவேட்களம் திருக்கோயிலைச் சுற்றி வரும் பொழுது, கீழே சறுக்கி விழுந்து விட்டதால், அவர் கையில் நன்றாக அடிபட்டது. அவரைத் தினந்தோறும் மருத்துவ

மனைக்கு அழைத்துச் சென்று, கட்டுக் கட்டிக்கொண்டு வந்தேன். அப்பொழுது, எங்களுக்கு டிசம்பர் மாதத்தேர்வு நெருங்கியது. தந்தையின் கவலையால், என்னால் தேர்வுக்கு நன்றாகப் படிக்க இயலவில்லை. திங்கட்கிழமை தேர்வு தொடக்கம். நான் அந்த வெள்ளிக்கிழமை தில்லைக்குச் சென்று, வழக்கம் போல் அம்பலவாணரைத் தரிசித்தேன். தரிசிக்கும் பொழுது, தந்தையின் நோயினால் சரியாகப் படிக்க வில்லையே, எப்பொழுதும் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெறும் எனக்கு, இந்நிலை வந்துவிட்டதே என் செய்வேன் எனப் பெருமானை வணங்கும் பொழுது, சிறிது கலக்கம் உற்றேன். பிறகு வீடு திரும்பினேன். சனிக்கிழமை காலை இட்டலி சாப்பிடுவதற்கு அண்ணாமலை நகரிலுள்ள பட் ஓட்டலுக்குச் சென்றேன். அங்குப் பல்கலைக்கழக அலுவலகப் பணியாளர் ஒருவர், என் பக்கத்தில் உட்கார்ந்து, காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் என்னைப் பார்த்து, "ஆலாலசுந்தரம் உனக்கு ஒரு நற்செய்தி தெரிவிக்கப் போகின்றேன். உங்கள் டிசம்பர் மாதத் தேர்வு, ஜனவரி மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், துணைவேந்தரும், சில ஆசிரியர்களும், வெளியூர் செல்கின்றனர்" என்றார். நான் அவரைக் கண்டு, "என்ன சார்! நான் என்ன தேர்வுக்குப் பயப் படுகின்றேனா?" என்று கேட்டேன். அதற்கு அவர், "நான் விளையாட்டாகக்கூறவில்லை. நீ போய் பல்கலைக்கழகஅறிக்கைப் பலகையைப்பார்" என்று கூறினார். நான், உடனே வெகுவேக மாகச் சென்று, அறிக்கைப் பலகையைக் கண்டு வியந்தேன். அப்பலகையில் "As the Vice-Chancellor will be out of station, the December examinations have been post-poned to January" என எழுதப்பட்டிருந்தது. இதுவும் தில்லை அம்பலவாணரின் திருவருளே என்று நினைத்து, ஸ்ரீ நடராசப் பெருமானை என் மனமொழி மெய்களால் இறைஞ்சினேன். ஸ்ரீ நடராசப் பெருமான் திருவருட்பாங்கினை விளக்க இவை போன்ற பல சான்றுகள் உள்ளன.

அந்நாள் முதல் ஸ்ரீ நடராசப் பெருமானை, ஆண்டு தோறும் தரிசிக்க வேண்டும் என்ற பேரவா என்னைப் பிடர் பிடித்து உந்தியது. 1931-ஆம் ஆண்டு முதல் ஆனி உத்திரத் திருவிழாவிலும் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிலும் தில்லை ஸ்ரீ நடராசப் பெருமானை, 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பதற்கேற்ப, நான் தரிசித்து வருகின்றேன். கடந்த 50 ஆண்டுகளாக அவ்வாறு தரிசித்தமையால், 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆனி உத்திரத்திருவிழாவிற்கு நான் சென்றபொழுது, ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் ஸ்ரீமாணிக்கவாசகர் குருபூசை அன்று, தில்லை. ஸ்ரீ சபாநாயகர் கோவில் திருப்பணிக் குழுவினருக்கும், பிற சைவ சமய சபையினருக்கும், பிற அன்பர்களுக்கும் மகேசுவர பூசை செய்து அவர்களை வணங்கி மகிழ்ந்தேன். கடந்த 50 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஸ்ரீ அம்பலவாணரைத் தரிசிக்கும் பேறு, எனக்களித்த ஸ்ரீ நடராசப் பெருமானின் திருவருளை வியந்து போற்றுகின்றேன். நான் பி. ஏ. ஆனர்ஸ் படிப்பதற்காக 1931 ஆம் ஆண்டில் அண்ணமலைநகர் சென்றது, ஸ்ரீநடராசப் பெருமான்பால் எனக்கு இடையறாப் பேரன்புதோன்றக்காரணமாக இருந்தது என்பதை உணர்ந்து மகிழ்கின்றேன். இன்னும் தொடர்ந்து அந்த இரண்டு திருவிழாக்களிலும், அப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற பேரவா உடையேன். திருவருள் கூட்டுவதாக!

# 2

## ஆசிரியப் பணி

நான் 1934-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் (B A. Hons: Tamil Literature) பட்டம் பெற்றேன். உடனே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் தலைவராக விளங்கிய திரு. அனவரத விநாயகம் பிள்ளை, எம்.ஏ; எல் டி; அவர்களின் மேற்பார்வையில், பல்கலைக்கழக "எம் லிட்" (M. Litt.) பட்டத்திற்குச் 'சங்கநூல்களால் அறியக்கிடக்கும் பண்டைத்தமிழ் மக்களின் நாகரிகமும், வாழ்க்கை முறையும்" என்ற பொருள் பற்றி ஆராய்ச்சி செய்ய தீர்மானித்தேன். ஆனால், "நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும்" என்ற பழமொழிப் படி, நான் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில் சேருவதற்கு மூன்று நாட்கள் முன்னரே, சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு.கே. குருவிலா ஜேக்கப் என்பவரிடமிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதில் நான் அவரைத் திங்கட்கிழமையன்று பதினொரு (11) மணிக்குச் சந்திக்க வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்தநாளில், நான் அவரைச் சந்தித்தேன். அவர், என்னை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராக நியமித்தார்.

### பள்ளி ஆசிரியர்

நாங்கள் தமிழ் முதுகலை (M.A.) வகுப்பில் படிக்கும் பொழுது, எங்களுக்கிருந்த ஒன்பது விடைத்தாள்களில் நான்கு விடைத்தாள்களை ஆங்கிலத்தில் எழுத வேண்டியிருந்தது. ஆனால், எனக்கு ஆங்கிலத்தில் பேசுவதற்கும்

எழுதுவதற்கும் நல்லபயிற்சி ஏற்பட்டது. எங்கள் முதுகலைத் (M.A.) தேர்வில், தமிழ் சிறப்புப் பகுதியாகவும், தென்னிந்திய வரலாறும், கல்வெட்டுக்களும் (South Indian History & Inscriptions) துணைப்பகுதியாகவும் இருந்தன. தென்னிந்திய வரலாற்றை, நாங்கள் ஆங்கிலத்தில்தான் படித்தோம். இவைகளையெல்லாம் நான், பள்ளித் தலைமையாசிரியர் அவர்களுக்கு எடுத்துக்கூறி, "எனக்கு ஆங்கில வகுப்பிலும் தொடர்பிருத்தல் நலம் பயப்பதாகும்" என்றேன். ஒரு தமிழாசிரியர் ஆங்கில வகுப்புத் தொடர்பு வேண்டும் என்று கூறிய செய்தியைக் கேட்டு, தலைமையாசிரியர் திரு குருவிலா ஜேக்கப் அவர்கள் வியப்படைந்து, மிகவும் மகிழ்ந்து, என் கையைக் குலுக்கிப் பாராட்டினார். பிறகு, அவர் ஏழாம் வகுப்பு 'ஏ'' பிரிவிற்கு (III பாரம் "A") என்னை வகுப்பாசிரியராக நியமித்தார். நான் ஏழாம்வகுப்பு "ஏ" (A) பிரிவு. "பீ" (B) பிரிவு என்ற இரண்டிற்கும் ஆங்கிலம் போதனு மொழியாக ஆங்கிலேயர் வரலாறும் (British history), இந்திய வரலாறும் (History of India) கற்பித்து வந்தேன். அதுவன்றி, ஏழாம்வகுப்பு "ஏ" (A) பிரிவிற்கு ஆங்கில இலக்கணமும் (English Grammar) கற்பித்து வந்தேன். இப்போது, தமிழக தலைமைச் செயலாளராக இருக்கும் திரு.க. திரவியம், ஐ.ஏ.எஸ்; என்பவர் 1934-ஆம் ஆண்டில், எனது ஏழாம்வகுப்பு "ஏ" (A) பிரிவில் படித்து வந்தார். அவர், அப்பொழுதே எல்லாப் பாடங்களிலும் திறமைபெற்று விளங்கினார். இந்த ஆங்கில வகுப்புகள் தவிர, நான் எட்டு, ஒன்பது, பத்தாம் வகுப்புகளுக்குத் தமிழ் கற்பித்து வந்தேன்,

அக்காலத்தில் கிறித்துவ உயர்நிலைப் பள்ளியும், கிறித்துவக் கல்லூரியும் ஒரே இடத்தில், ஒரே கட்டிடத்தில், சென்னை முத்தியாலுப்பேட்டை லிங்கிசெட்டித் தெருவில் இடம் பெற்றிருந்தன. எனவே, மொழி ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் பாடம் கற்பித்து

வந்தனர் ஆதலால், நானும் கல்லூரி இண்டர்மீடியட் மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடம் கற்பித்து வந்தேன். அப்போது, தமிழ்த்துறையில் திரு எஸ்.டி. சற்குணர், பி ஏ. திரு கோபாலய்யர், பி.ஏ., வித்துவன் சுப்பிரமணிய ஐயர் என்ற மூவரோடு, நானும் சேர்ந்து, தமிழ்ப்பணியாற்றி வந்தேன்.

அக்காலத்தில், எஸ்.எஸ்.எல் சி. அரசாங்கத் தேர்வில் முதல் முறையும், இரண்டாம் முறையும் தோல்வியுற்ற மாணவர்கள் பத்தாம் வகுப்பில் மீண்டும் சேர்ந்து, தொடர்ந்து படிக்கும் வாய்ப்பினைப் பெற்றனர் அவர்கள் படிக்கும் வகுப்பின் பிரிவுக்கு "சப்ளிமென்டரி செக்ஷன்" (Supplementary Section) என்று பெயர். அந்த வகுப்பு மாணவர் பெரும்பாலும் கட்டுக்கு அடங்காதவர்களாக இருப்பர். என்னினும் மூத்த தமிழாசிரியர்கள் அந்த சப்ளிமென்டரி வகுப்பிற்குப் போவதற்குச் சிறிது அச்சம் கொண்டு, என்னை அந்த வகுப்பிற்குத் தமிழ் கற்பிக்கும்படி நியமித்தனர். நான் என் பணியில் வழுக்கி விழுவேன் என்பது அவர்கள் எண்ணம் போலும். ஆனால், இறைவன் செயலால், அந்த வகுப்பு மாணவர்கள், வகுப்பில் மிகவும் அடக்கமாக இருந்ததோடு, என்னிடத்தில் தனிப்பட்ட அன்புடன் பழகினர்.

1935-36 ஆம் கல்வி ஆண்டில், எங்கள் ஏழாம்வகுப்பு மாணவரோடு நானும் எட்டாம் வகுப்பு ஆசிரியராக மாற்றப்பட்டேன். திரு. பால் டேவிட் (Paul David) என்ற எட்டாம்வகுப்பு "ஈ" (E) பிரிவின் வகுப்பாசிரியர், ஆசிரியப் பயிற்சி (L. T. Training) பெறுவதற்கு ஒரு வருடம் விடுமுறையில் சென்றார். எனவே, நான் அவருக்குப்பதிலாக, எட்டாம்வகுப்பு "ஈ" (E) பிரிவிற்கும் வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டேன். நான் எட்டாம்வகுப்பு "ஏ" (A) பிரிவிற்கும், "ஈ" (E) பிரிவிற்கும் ஆங்கில போதனை முறையில்

இந்தியர் வரலாறும் (History of India), ஆங்கிலேயர் வரலாறும் (British history) கற்பித்து வந்தேன். இப்பொழுது தோல்நோயில் சிறந்த மருத்துவராக விளங்கும் டாக்டர் தம்பய்யா (Dr. Thambiah) என்பவர், அப்பொழுது நான்காம் வகுப்பு ''ஈ'' (E) பிரிவில் படித்துவந்தார். அப்பொழுதே, அவர் சிறந்த மாணவராகத் திகழ்ந்து வந்தார்.

அப்பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி என்றல் என்றும் மறக்க முடியாது. எட்டாம் வகுப்பு ''ஈ'' (E) பிரிவில் படிக்கும் ஒரு மாணவரின் தந்தையார், அப்பள்ளித் தலைமையாசிரி யருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். அவர் அந்த கடிதத்தில், தன்மகன் மற்றப் பாடங்களைப் படிக்காமல், எப்பொழுதும் ஆங்கில வரலாறும், இந்திய வரலாறும் படித்துக்கொண்டு, அவைகளுக்குரிய வினக்களுக்கு விடை யெழுதிக் கொண்டிருக்கிருன் என்றும் குறிப்பிட்டிருந்தார். தலைமையாசிரியர் அக்கடிதத்தை வரலாற்றுத்துறைத் தலைவரான திரு. வாட்சா (Watsha) என்பவருக்கு அனுப்பினர். திரு. வாட்சா அவர்கள் என்னை அழைத்துக் கேட்டபொழுது, நான் மாணவருக்கு வரலாற்றுப் பாடங் களில் வினக்கள் கொடுத்து, விடையெழுதி வரும்படிக் கூறுவதையும், அந்த வினக்களுக்கு வகுப்பில் விடை கேட் பதையும் அவருக்கு எடுத்துக் கூறினேன். இதைக் கேட்ட அவர் என்னைப் பாராட்டி, ''தம்பி, நீங்கள் பள்ளிக்கு வந்த, இரண்டாம் ஆண்டிலேயே இந்தச்சிறந்தப் பாராட்டுரையைப் பெற்றதைக் கண்டு, நான் மகிழ்கின்றேன். நீ பிற்காலத்தில் சிறந்த பேராசிரியனுக விளங்குவாய்'' என்று ஆசி கூறினர்.

நான் கல்லூரியில் 'இண்டர்மீடியட்' (Intermediate) வகுப்பிற்கு உரைநடைப்பாடம் நடத்தினேன். திரு. பொன்னய்யா என்பவர் எழுதிய ''நாணயம்'' என்பது உரை நடை நூலாக அமைந்தது. நான் அப்பாடம் நடத்துவதற்கு

முன்பு, பொருளாதாரத் துறையிலுள்ள சில ஆங்கிலப் புத்தகங்களையும் படித்து, அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பாடப்பகுதியாகவுள்ள அந்த உரைநடைநூலில் எவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன? என்பதைக் கூறிய போது, மாணவர்கள் மிக அமைதியுடனும் 'ஆசையோடும் கேட்டு வந்தனர். கல்லூரியில் என் தமிழ்வகுப்பு மிக அமைதியாய் இருக்கிறதென்று தமிழ்த்துறைத்தலைவர் திரு.ச.த. சற்குணர் என்பவரிடம் ஒருவர் கூற, அவர் "வகுப்பில் செட்டியார் இசையாகப் பாடுவதால், மாணவர் அமைதியாக இருப்பர்" என்று கூறினாராம். "நாணயம்" என்ற பொருளாதாரப் பாடத்தில் நான் எதை இசையாகப் பாடமுடியும்? கல்லூரியிலுள்ள மாணவர்கள் என்னை விட சிலர் உயரமாக இருந்தனர். எனவே, நான் எப்பொழுதும் நிஜார், டை முதலியவற்றுடன், தலைப்பாகையும் அணிந்து செல்வதுண்டு.

1937 ஆம் ஆண்டு தமிழ்த்துறைத்தலைவர் திரு.ச.த. சற்குணர் அவர்கள் கல்லூரியினின்று ஓய்வு பெற்றார். 1937 ஆம் ஆண்டு தாம்பரத்திலுள்ள புதிய கட்டிடத்திற்குக் கிறித்துவக்கல்லூரி மாற்றப்பட்டது. திரு. கோபால ஐயர், பி.ஏ; வித்துவான் சுப்பிரமணிய ஐயர், நான் என்ற மூவரில் எந்த இருவர் தாம்பரத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்பது கேள்வியாக இருந்தது. எங்கள் மூவரில், திரு. கோபால ஐயர் அவர்கள் இருவரைக் காட்டிலும் பல ஆண்டுகள் கல்லூரியில் இருந்தமையால், அவர் தாம்பரத்திற்குப் போகலாமெனத் தீர்மானிக்கப்பட்டது. என்னைவிட திரு வித்துவான் சுப்பிரமணிய ஐயர் கல்லூரியில் பல ஆண்டுகள் பணியாற்றிய போதிலும், பள்ளித் தலைமையாசிரியர் திரு. குருவிலா ஜேக்கப் அவர்கள் தாம்பரத்திற்குப் போவதற்கு என்னுடைய பெயரைப் பரிந்துரை செய்தார். எனவே, நானும், கோபால ஐயரும் தாம்பரத்திற்கு மாற்றப்பட்டோம். திரு. குருவிலா ஜேக்கப் அவர்களின் அன்பினையும், இந்த உதவியினையும் யான் என்றும் மறவேன்.

# 3

# பேராசிரியர்

## கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர் பணி

நான் 1937 ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில், தமிழ்த்துறையில் விரிவுரையாளனாக நியமிக்கப்பட்டேன். 1951 ஆம் ஆண்டில் தமிழ்த்துறைத்தலைவர் பதவியும், தமிழ்ப் பேராசிரியர் பதவியும் பெற்றேன். 1964-ஆம் ஆண்டிலிருந்து 1968-ஆம் ஆண்டு வரையில் மொழித்துறைத்தலைவனாகப் (Superintendent of Indian languages) பணியாற்றி, 1968ல் ஓய்வு பெற்றேன். பிறகு, 1968-ஆம் ஆண்டு முதல் 1973-ஆம் ஆண்டுவரை, அதேகல்லூரியில் இந்தியப்பல்கலைக்கழகமானியக் குழுவின் ஆராய்ச்சிப் பேராசிரியனாகப் (University Grants Commission Project for Teaching and Research) பணியாற்றினேன். எனது மேற்பார்வையில் தமிழ்த்துறையைச் சார்ந்த சில ஆசிரியர்கள் சென்னைப் பல்கலைக்கழக எம்.லிட். பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்து வந்தனர். அவர்களுள் திரு. P.K. உலகநாதன், திருமதி, கிரேஸ் செல்வராஜ் என்ற இருவரும் 1973-ஆம் ஆண்டிற்குள் தங்கள் ஆராய்ச்சியை முடித்து, எம்.லிட். பட்டமும் பெற்றனர். 1968-ல் தொடங்கிய இந்தியப்பல்கலைக்கழகமானியக்குழுவின் பதவிக்காலம்1973-ல் முடிந்தது. எனவே, இன்னும் ஆராய்ச்சியினை முடிக்க இயலாத திரு. V, கிருஷ்ணசாமி, திரு, T.R. செல்வராஜ் ஆகிய இரண்டு ஆசிரியர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற காரணத்தினாலும், தமிழ்த்தொண்டு செய்ய வேண்டும் என்ற கருத்தினாலும், நான் அக்கல்லூரியில் 1973 முதல் 1980 வரை சிறிதும் ஊதியமின்றி கௌரவப் பேராசிரியனாகப் பணியாற்றி

னேன். எனது இந்த கௌரவப் பேராசிரியத் தொண்டினைக் கல்லூரி ஆட்சியாளர், போற்றி மிகவும் பாராட்டினர். இதனால், 1934ல் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்த்துறையில் சேர்ந்த நான், 1980-ல் என் தமிழ்ப் பணியை முடிக்க இயன்றதால், நான் அக்கல்லூரியில் தொடர்ந்து 46 ஆண்டுகள் பணிசெய்யும் பேறு பெற்றேன். எனவே, தமிழாசிரியர், ஒருவர் ஒரு கல்லூரியில் தொடர்ந்து 46 ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றியது ஓர் அரிய சாதனையாகும். இவையெல்லாம் இறைவன் செயலே.

மேலே கூறப்பட்ட இரண்டு தமிழாசிரியர்கள் எம். லிட். பட்டம் பெற்றதும், கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர்கள் என் தொண்டினைப் பாராட்டும் வகையில் 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், ஒரு கூட்டம் நடத்தினர். அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கிறித்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். எம். ஏபிள் என்பவர் பின்வருமாறு கூறினார்

''கிறித்துவக் கல்லூரியைத் தோற்றுவித்த டாக்டர் வில்லியம்மில்லர் என்பவர்,இக்கல்லூரி முதல்வராக 48 ஆண்டுகள் பணிபுரிந்தார். அவருக்கு அடுத்தப்படியாக நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் அவர்கள் 46 ஆண்டுகள் இக்கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றியது ஒரு சிறந்த சாதனையாகும்'' எனக் கூறி, கல்லூரி முதல்வர் பாராட்டினார். மேலும், ''இக்கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றிய மறைமலையடிகளுக்குப் பின், சிறந்த தமிழ்ப் பணியாற்றியவர் பூ. ஆலாலசுந்தரனார்'' எனப் புகழ்ந்துரைத்தார்.

கிறித்துவக் கல்லூரியோடு எங்கள் குடும்பம் நான்கு தலைமுறையாகத் தொடர்பு கொண்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். என் தந்தையார் பூ. வேலு செட்டியார் கிறித்துவக் கல்லூரியின் முதல்வரான டாக்டர் வில்லியம்

மில்லர் என்பவரின் மாணவராக இருந்தார். "I am a Student of Dr Miller" என்று அவர் பலமுறை பெருமிதத்துடன் கூறியதை நான் கேட்டிருக்கிறேன். என் தந்தையாருக்குப் பிறகு, நான் இக்கல்லூரியில் பல ஆண்டுகள் பணியாற்றியதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். எனக்கு அடுத்தபடியாக, என்னுடைய இரு பிள்ளைகளும் இக்கல்லூரியில் படித்தனர். இங்குப் படித்த என்னுடைய மூத்த மகன் திரு. பூ. ஆ. சிவகுமாரன், பி. ஏ. பட்டமும், இளைய மகன். திரு. பூ ஆ. நடராசன், பி.காம் பட்டமும் பெற்றனர். அதுவன்றி, என் பேரனாகிய செல்வன் T. C. பாலசுப்பிரமணியனும் (மூத்த மகள் வயிற்றுப்பிள்ளை) இக்கல்லூரியில் படித்து, பி.காம். பட்டம் பெற்றான். ஆகவே, எங்கள் குடும்பம் நான்கு தலைமுறையாக இக்கல்லூரியோடு தொடர்பு கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியில் தமிழ்த்துறை அல்லாமல், பிற துறைகளிலும் நான் பணியாற்றினேன்.

1. சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி ஆட்சிக் குழுவின் உறுப்பினன்.
2. கல்லூரி ஆட்சிக் குழுவின் (Member of the Senate) Senate உறுப்பினர்; செயலாளன். ((Secretary of the Senators)
3. தமிழ்ப் பேரவைத் தலைவன்.
4. கல்லூரிப் பணியாளர் சங்கப் பொருளாளன்; தலைவன். (M. C. C. Service Staff Association Treasurer and President).
5. கல்லூரி நூலக ஆட்சிக் குழுவின் உறுப்பினன் (Member of the Library Committee).

கல்லூரித் தமிழ்ப் பேரவையின் தலைவனாக நான் இருந்த போது, பேரவையின் சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் சொற்பொழிவாளர்களை, யான் என் இல்லத் திற்கு அழைத்து வந்து, அவர்களுக்குத் தேநீர் விருந்தளித்து, அவர்களோடு அளவளாவி மகிழ்வதுண்டு. அவ்வாறு வந்தவர்களில் ஒரு சிலரின் பெயரை ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன்.

1. திரு. காமராஜ் நாடார்
2. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
3. அறிஞர். அண்ணா
4. திரு. டி. கே. சண்முகம்
5. திரு. டி. கே பகவதி
6. டாக்டர். டி. எம். பி. மகாதேவன்
7. இராஜாசர். எம். ஏ. முத்தையா செட்டியார்
8. திரு. ம. பொ. சிவஞானம்
9. திரு. சி. சுப்பிரமணியம்
10. திரு. கொத்தமங்கலம். சுப்பு
11. திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரன்
12. டாக்டர். மு வரதராசனார்
13. டாக்டர் A. C. செட்டியார்
14. டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை

யான் அக்கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் Dr. Hogg, Dr. A. J. Boyd, Dr. J. R. Maccphail, Dr. Chandran Devanesan, Thiru Bennet Albert, Dr. M. Abel என்ற ஆறு கல்லூரி முதல்வர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யான் பணியாற்றிய காலத்தில் இருந்த இக்கல்லூரி சூழ்நிலையும், மாணவர்—ஆசிரியர் நட்பும், ஆட்சியாளர்—ஆசிரியர் இவர்களின் ஒற்று மையும், ஆசிரியர் பழைய மாணவரிடத்து காட்டும் அன்பும்,

கல்லூரியிலுள்ள சட்டத்திட்டங்களும், கல்லூரி ஒழுங்கு முறையும், கல்லூரி அமைப்பும், இயற்கைத் தோற்றமும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. பல பல்கலைக் கழகங்களிலும், பிற இடங்களிலும் நான் பெற்ற பதவிகளுக்குக் காரணம், என் புலமையே யன்றி, நான் கிறித்துவக் கல்லூரியில் கொண்டிருந்த தொடர்பும் ஆகும்.

இக்கல்லூரி ஆசிரியர்களின் மனைவிமார் சங்கம் (Wives fellow-ship) ஒன்று உண்டு. அதில் என் மனைவியும் ஓர் உறுப்பினளாக இருந்தாள். அவர்கள் பருவத்திற்கொரு முறை ஒவ்வொரு வீட்டில் கூடுவர். அப்பொழுது தேநீர்விருந்தும், சொற்பொழிவுகளும்நடைபெறும். கிறிஸ்துமஸ்பண்டிகை விழாவில், இந்து மதத்தைச் சார்ந்த ஆசிரியர் குடும்பத்ினரும் கலந்து கொள்வர். எனவே, நாங்கள் அனைவரும் கிறித்துவக் கல்லூரிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் (We all belong to the Christian College family) என்று நான் அடிக்கடி கூறுவதுண்டு. என் நன்றியறிதலைத் தெரிவிப்பதற்காக, நான் இக்கல்லூரியில் மூன்று பரிசுத் திட்டங்கள் ஏற்படுத்தி, நிதி அளித்துள்ளேன். ஒன்று, என் தந்தையார் பெயரிலும், (II M. A. Polities-தேர்வுக்குரிய பரிசும்), மற்ருென்று, என் பெயரிலும்,) B. A. Part III special Tamil-தேர்வுக்குரிய பரிசும்) ஏற்படுத்தியுள்ளேன். "கிறித்துவக் கம்பன்" எனப் போற்றப்படும் கிருட்டிணப்பிள்ளையின் நினைவாக, பல கல்லூரி மாணவ, மாணவியரும் கலந்து கொள்ளும் அவரது பாடல் போட்டிக்கு, "உலாவரும் ஒரு வெண்பொற் கிண்ணம்" அளித்துள்ளேன். கடந்த 46 ஆண்டுகளாகச் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில், தமிழ்த் துறையில் பணியாற்றியபோது, நடந்த அரிய நிகழ்ச்சிகளை என் வாழ்க்கையில் நான் என்றும் மறவேன்.

4

# சென்னைப் பல்கலைக் கழகத்தொடர்பு

## தமிழ்ப்பாடத் திட்டக்குழு

1946ஆம் ஆண்டு, நான் சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினனாக நியமிக்கப் பட்டேன். அப்பாடத்திட்டக் குழுவின் முதல் கூட்டத்தில் நான் பெற்ற அனுபவத்தை ஈண்டுக் கூற விழைகின்றேன். திவான்பகதூர் நாராயணசாமி பிள்ளை அவர்கள் அக்குழுவின் தலைவராக இருந்தார். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு வரதராசனார், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், புலவர் கார்மேகக் கோனார் முதலியோர் உறுப் பினராக இருந்தனர். ஒரு முதிய உறுப்பினர் ஒரு புத்தகத்தை என்னிடத்தில் கொடுத்து, அதற்குப் பரிந் துரைக்கும்படிக் கூறினார். அதற்கு, நான் "அப்புத்தகம் இன்டர்மீடியட்டிற்கும் தகுதியில்லை; இளங்கலை பி. ஏ.,B. A. வகுப்பிற்கும் தகுதியில்லை'' எனக் கூறிவிட்டேன். இதைக் கேட்ட உடனே, அவரது முகம் சிவந்தது. அவர் என்னை நோக்கி, 'நீங்கள் புதிய உறுப்பினர்; இப்பொழுது தான் முதன்முறையாகக் கூட்டத்திற்கு வந்தீர்கள். உங்களை அப் புத்தகம் பற்றி, முன்மொழியக் கேட்டது என் தவறு என்பதை நான் உணர்கின்றேன்'' எனக்கூறி, மற்றொரு முதிய உறுப்பினரிடம் அப்புத்தகத்தைக் கொடுத்து, முன் மொழியக் கூறினார். அவரும் முன்மொழிந்தார்; மற்றோர் உறுப்பினரும் வழிமொழிந்தார். மொத்தம் பதின்மூன்று உறுப்பினர்கள். ஒவ்வொரு உறுப்பினரும் அப்புத்தகத்தைப் பாடமாக வைக்கலாமென்று கூறிவிட்டனர்.

என்னுடைய முறை வந்தது. நான் எழுந்து நின்று, அப்புத்தகத்தைப் பற்றி எழுதி வைத்திருந்த எழுத்துப் பிழை, வாக்கியப்பிழை, கருத்துப்பிழை முதலிய பிழைகளை யெல்லாம் படித்துக்காட்டி, "இப்புத்தகம் பாடமாக அமையு மாயின், இக்குழுவின் உறுப்பினர் புத்தகத்தைப் படிக்காமல், அதனைப் பாடமாக அமைத்தனர் என்ற பழிச்சொல் நம் குழுவிற்கே வந்து சேரும்" எனக் கூறி, நான் உட்கார்ந்து விட்டேன். இதைக் கேட்ட தலைவர் நாராயணசுவாமி பிள்ளையவர்கள் அப்புத்தகத்தை மேசை மேல் ஓங்கி வைத்து விட்டு, "I am glad this youngman has read this book carefully" எனக்கூறி, அப்புத்தகம் பாடமாக வைக்கக் கூடா தென்று தீர்ப்பளித்தார்.அது முதற்கொண்டு, ஆண்டுதோறும் கூட்டத்தில் புத்தகம் வரும் பொழுது, ஆசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் என்னைப் பார்த்து, "அப் புத்தகம் பற்றி உங்கள் பஞ்சாங்கத்தைப் படியுங்கள்" என் பார். எனது உண்மை உழைப்பினால், 20 ஆண்டுகள் தொடர்ந்து அக்குழுவின் உறுப்பினனாக நான் நியமிக்கப் பட்டேன். 20 ஆண்டுகள் கடந்து, மேலும் மூன்று ஆண்டுகள் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் அன்பின் பயனால், அக்குழுவின் தலைமைப் பதவி எனக்கு அளிக்கப்பட்டது. நான் தலைமையேற்ற முதல் இரண்டு ஆண்டுகள் எல்லாம் சரியாக நடைபெற்றன. வந்த புத்தகங்களை நான்கு கூறுகப் பிரித்து, நான்கு உட்குழுவிற்கு அளிப்பதுண்டு. அதனால், மூன்றாம் ஆண்டு, ஒருவர் குழுவிற்குப் புத்தகம் அனுப்பாமல், தனிப் பட்ட முறையில் எல்லா உறுப்பினருக்கும் அனுப்பி, அப் புத்தகம் பாடமாக வைப்பதற்கு முயன்றார். என்னைக் கேட்ட போது, நான் அப்புத்தகத்தைப் படிக்கவில்லை என் றேன். ஏதோ சூழ்ச்சியின் காரணமாகவும், சூழ்நிலையின் காரணமாகவும் அப்புத்தகம் வைக்கப்பட்டது. பிறகு, அப் புத்தகம் பற்றி, பல குறைபாடுகள் பருவத்தாளில் வெளி வந்தன. இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், வருத்தத் தையும் அளித்தது.

எங்கள் கல்லூரியின் பிரதிநிதியாக 1952-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகக் கல்வித் திட்டக் குழுவின் (Academic Council) உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். பிறகு, அதே ஆண்டில் அகெடமிக் கவுன்சிலி லிருந்து பல்கலைக்கழக செனட் சபைக்கு நான்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கும் செனட்சபை தேர்தல் நடை பெற்றது. நானும் அத்தேர்தலில் ஒரு வேட்பாளனாக இருந் தேன். நான்கு இடத்திற்குப் பத்துப் பேராசிரியர்கள் போட்டியிட்டனர். அந்த வேட்பாளருள் சிலர் கல்லூரி முதல்வராகவும் இருந்தனர் அத்தேர்தலில் எங்கள் கல்லூரி ஆசிரியர்கள் பலரும் எனக்குப் பல துறைகளில் உதவி புரிந் தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வருள் நான் இரண்டாம் இடத்தைப் பெற்று, சிறந்த முறையில் வெற்றி பெற்றேன். 1961-63-ல் சென்னைப் பல்கலைக் கழக செனட் சபைக்கும் (Senate) அகெடமிக் கவுன்சிலுக்கும் (Academic Council) உறுப்பினராகப் பல்கலைக்கழக வேந்தர், தமிழ்நாட்டின் ஆளுநர் அவர்களால் தமிழ்மொழிக்காக நான் நியமிக்கப் பட்டேன்.

1963 ல் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட ஆங்கிலம்-தமிழ் அகராதியினைத் தொகுத்த அறிவுரைக் குழுவின் உறுப்பினராக 1961-லிருந்து பணியாற்றினேன். (Member of the Advisory Committee for the English-Tamil Dictionary). சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி ஆறு தொகுதிகளாக 1930-ஆம் ஆண்டில் வெளி வந்தது.

1970 முதல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தக் குழுவின் உறுப்பினனாகப் பணியாற்றினேன். சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா அறக்கட்டளையின் சார்பில் 1968-ஆம் ஆண்டில் டாக்டர் மு. வரதராசனுர்

அவர்களின் தலைமையில், நான் தோத்திரப் பாக்களில் காணும் இலக்கியச் சுவை என்ற பொருள்பற்றி மூன்று சொற்பொழிவுகள் ஆற்றினேன். அச்சொற்பொழிவுகள் நூல் வடிவில் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளி வந்தது.

## கல்லூரிகளை மேற்பார்வையிடும் பல்கலைக்கழக ஆணைக்குழு

சென்னைப் பல்கலைக் கழக மேற்பார்வையிடும் ஆணைக் குழுவின் உறுப்பினனாக, நான் பல கல்லூரிகளுக்குச் சென்ற துண்டு. இராமநாதபுர மாவட்டத்திலுள்ள ஒரு கல்லூரியில் பி. ஏ. சிறப்புத் தமிழ்ப் பாடம் (B. A Group V) தொடங்க வேண்டியிருந்தது. நான், அக்கல்லூரிக்குத் தனி உறுப்பின னாகச் (Oneman Commission) சென்றேன். அக்கல்லூரி முதல்வர் அனுப்பிய புதிய வகுப்பு அறைகளின் சுற்றளவு முதலிய பட்டியல் எனக்குப் பல்கலைக் கழகத்தார் அனுப்பி யிருந்தனர். அப்பட்டியலில் ஐந்து வகுப்பறைகளில் ஒவ் வொரு வகுப்பறையின் அளவும் 20''/30'' எனக் குறிக்கப் பட்டிருந்தது. நான் அக்கல்லூரிக்குப் போனபோது, கல்லூரி முதல்வர் என்னை அழைத்துச் சென்று, அந்த வகுப் பறைகளைக் காட்டினார். அந்த அறைகளைக் கண்டதும் நான் வியப்புற்றேன். ஏனெனில், அந்த அறைகளின் மேல் தென்னை ஓலையால் வேய்ந்த கூரைப் போடப் பட்டிருந்தது. நான் அக்கல்லூரி முதல்வரிடம், ''சில ஆங்கில வகுப்புகள் இந்த குடிசைகளிலும் சில தமிழ் வகுப்புகள் பெரிய கட்டடத் திலும் நடத்தப்படலாமே என்றேன். அதற்கு அவர் இந்த அறைகள் பி.ஏ. குரூப் ஐந்து தமிழ் சிறப்புவகுப்பிற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றார். இதைக் கேட்ட நான், ''தமிழ் வகுப்பை இழிவுப்படுத்துவதாக இருப்பின் இந்தப் பிரிவு(B.A. Group v) இக்கல்லூரியில் தொடங்குவதற்கு நான் இசைவு

அளிக்க இயலாது'' என்றேன். அதற்கு அவர்'' நான் ஒரு செனட் உறுப்பினர்; நீங்களும் ஒரு செனட் உறுப்பினர்; மேலும், நீங்கள் என் நண்பர்'' எனக் கூறினார். அதற்கு நான், ''இது நண்பர்களைப் பற்றிய விஷயமன்று; நான் பல்கலைக்கழகச் சார்பில் வந்துள்ளேன். என் மனச்சான்று படியே நடப்பேன். ''நீங்கள் நண்பராக இருந்தால், என் வீட்டிற்கு வந்தால் காப்பி தருவேன்'' என்று கூறினேன். அதற்கு அவர் நீங்கள் ஏன் இவ்வளவு கடுமையாக இருக்கிறீர்கள்'' என்று மனக்கசப்புடன் கேட்டார். பின்னர், கல்லூரி முதல்வர் தம் பக்கத்திலிருந்த கல்லூரி ஆட்சிக் குழுவின் தலைவரைக் கண்டு, ''பி. ஏ. குரூப் V வகுப்பின் அறைகள் குடிசைகளாய் இருப்பதால், அந்தப் பிரிவு தொடங்குவதற்கு, இங்கு வந்துள்ள பல்கலைக்கழக ஆணைக் குழு உறுப்பினர் இசைவுதர இயலாதென்று கூறிவிட்டார்'' எனக் கூறினார். அதைக்கேட்ட ஆட்சிக் குழுவின் தலைவர், ''நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று கல்லூரி முதல்வரிடம் கேட்க, ''அதற்கு அவர் நம்மிடம் பணம் அதிகமாக இருந்தால் அக்கூரைகளை மாற்றி கட்டடமாக அமைக்கலாம்'' என்றார். உடனே கல்லூரி ஆட்சிக்குழுவின் தலைவர் ரூபாய் 10,000க்குரிய காசோலையைக் கல்லூரி முதல்வரிடம் கொடுத்தார். கல்லூரி முதல்வர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, என்னை நோக்கி, ''ஐயா! நான் முதலில் உங்களிடம் தவறாகக் கோபித்துக் கொண்டேன். நீங்கள் சட்டப் படியும், மனசாட்சியோடும் நடந்ததால், இப்போது எங்களுக்கு நன்மை கிடைத்தது'' என்றார். இது ஏறக் குறைய 20 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியாகும்.

கடலூரிலுள்ள கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரியை மேற்பார்வையிடும் பல்கலைக்கழக ஆணைக்குழுவில், தமிழ்த் துறைப் பகுதிக்காக, யானும் ஓர் உறுப்பினனாக இருந்தேன். பல கல்லூரி முதல்வர்களும் அக்குழுவின் உறுப்பினர்களாக

இருந்தனர். அக்குழுவிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராயிருந்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைவர் நாங்கள் கடலூர் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, எனக்குப் பல்கலைக்கழகத்தி லிருந்து ஓர் அவசர கடிதம் வந்தது. அதில் குழுவின் தலைவர் டாக்டர் A.L. முதலியார் அவர்கள் உடல்நலம் குன்றி இருந்தமையால், அக்குழுவின் தலைமைப் பொறுப்பினை நான் ஏற்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது கல்லூரி முதல்வர்கள் பலர் அக்குழுவில் இருக்க, எனக்கு அப்பொறுப் பான பதவியினை அளித்தமை கண்டு, நான் மிகவும் வியப் படைந்தேன். இந்த நிகழ்ச்சியால், பல்கலைக்கழகத்தார் என் மீது வைத்திருந்த அன்பினையும், நம்பிக்கையினையும் அறிந்து கொண்டேன். இறைவன் இன்னருளால், எனக்குக்கொடுத்த பொறுப்பான பதவிக்கு வேண்டிய செயல்முறைகளைச் சிறப் பாகச் செய்து முடித்தேன்.

சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில், கோவை பி. எஸ். ஜி. (P. S. G) கலைக்கல்லூரியில், தமிழ் முதுகலை (எம். ஏ) வகுப்புத் தொடங்குவதற்கு, நான் தனிநபர் மேற் பார்வை யாளனாக (One man Commission) சென்றேன். அவ்வகுப்புத் தொடங்குவதற்குரிய வழிவகைகள் பற்றி அக்கல்லூரிக்கு அறிவுரை கூறினேன். அதைப் போலவே, தனிநபர் பல்கலைக் கழக மேற்பார்வையாளனாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வித்துவான் வகுப்புத் தொடங்குவதற்கும், மதுரை லேடி டோக் பெண்கள் கல்லூரியில் பி. ஏ. (குரூப் V) தமிழ்ச் சிறப்புப் பாடப்பகுதித் தொடங்குவதற்கும் சென்றேன். மேலே கூறப்பட்ட கல்லூரிகளேயன்றி, கீழ்வரும் கல்லூரி களுக்கு ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக கல்லூரி மேற்பார்வை ஆணைக்குழுவின் உறுப்பினனாக நியமிக்கப் பட்டேன்.

1. A. M. Jain college, Madras.
2. Govt. Arts college for women (North Madras), Madras
3. Vaishnava college for women, Chromepet.
4. S. I. V. E. T. College, Gowrivakkam
5. Govt. Arts college, Ariyalur.
6. Covt. Arts college, Cheyyaru.
7. Chikkaiah Naicker college, Erode.
8. Govt. Thirumagal mill's college, Gudiyattam.
9. Auxilium College, Katpadi.
10. C. Abdul Hakeem college, Melvisharam (N. A.)
11. Dharmamurthi Rao Bahadur Calavala Cunnan Chetty's Hindu College, Pattabiam.
12. Srimathi Sarada college, Salem.
13. Rajah Serfoji Govt. College, Thanjavur.
14. Govt. Arts College, Tindivanam.
15. Jamal Mohamed College, Tiruchirapalli.
16. Govt. Arts College, Thiruvannamalai.

பத்தாண்டுக்கொரு முறை நடைபெறும் சென்னைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளை மேற்பார்வையிடும் ஆணைக் குழுவில் தமிழ்ப்பகுதிக்கு நானும், வரலாற்றுப் பகுதிக்கு எங்கள் கல்லூரி முதல்வர் டாக்டர் சந்திரன் தேவநேசன் அவர்களும் உறுப்பினராகப் பணியாற்றினோம். அக்குழுவில் கல்லூரி முதல்வர்களும், பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறைத் தலைவர்களும் இடம் பெற்றனர். சென்னைக் கந்தசாமிநாயுடு கல்லூரியை மேற்பார்வையிட குழு சென்ற போது, குழுவின்

தலைவர், துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் குழுவின் உறுப்பினர்களைப் பொதுக்கூட்டத்தில் அறிமுகப் படுத்தினர். அவர் என்னைப் பற்றிக் கூறும் போது, ''திரு. பூ. ஆலாலசுந்தரனார் அவர்கள் இக்குழுவின் உறுப் பினர்களுள் மிகவும் மூத்தவர் ஆவர்; சிறந்த அனுபவமும் புலமையும் உடையவர்'' எனக்கூறி என்னை அறிமுகப்படுத் தினர். இது அவர் என்பால் வைத்துள்ள அன்பினையும், நன்மதிப்பினையும் எடுத்துக் காட்டுவதாகும்.

## எம். லிட். பட்டத் தேர்வுக்குழு

எம். லிட். தேர்வுக்காக அனுப்பப்பட்ட பல ஆராய்ச்சிப் பகுதிகளைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது அதற்கு இருவர் தேர்வாளர்களாக இருப்பதுண்டு. இருவரும் சேர்ந்து ஆராய்ச்சிப் பகுதி சரி என்றால் தான், எம். லிட். பட்டம் அளிக்கப்படும். ஒருவர் சரியில்லை என்றாலும் பட்டம் அளிப்பதில்லை. சில இடங்களில்தான் மற்றொரு தேர்வாள ரோடு மாறுபட்ட கருத்து உடையவனாக இருந்தேன். ஒரு முறை தேர்வாளர் குழுவின் தலைவர் ஒருவர், பல பிழைகள் அடங்கிய ஓர் ஆராய்ச்சிப் பகுதியை எம். லிட். பட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளலாம் என்றார். மேலும், நாம் அவருக்குப் பட்டம் கொடுக்கா விட்டால், உலகம் நம்மைப் பழிக்குமே என்றார். யாரேது சொன்னாலும் சொல்லட்டும். நான் என் கருத்துப்படி நடக்க விரும்புவதால், உங்கள் கருத்தோடு, மாறுபட்ட கருத்துடையவனாக இருக்கின்றேன் என்று அவரிடம் கூறினேன்.

''சங்க இலக்கியத்தில் காணும் சமயக்கொள்கை'' என்பது அந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் தலைப்பு. கட்டுரை யாசிரியர் ''பசுபதி'' என்ற சொல்லுக்குப் ''பசுக்களுக்குத் தலைவன்'' என்று பொருள் எழுதியிருந்தார். இது தவறாகும்.

இங்கு ''பசு'' என்பது ''ஆன்மா'' என்ற பொருளில் வந்துள்ள தால், உயிர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானைக் குறிக்கும். இது போன்ற பல கருத்துப்பிழைகள் அக்கட்டுரையில் காணப் பட்டன. எனவே, அக்கட்டுரையை ஏற்றுக் கொள்ள நான் இசையவில்லை. இதனால், ஒரு சிலர் என்னைப் பழிக்கவும் தொடங்கினர் அந்த மாணவருக்கு மறுபடியும் எழுதி அனுப்பவாய்ப்பு உள்ளதால், இவைகளைத் திருத்திக்கொண்டு மீண்டும் அவர் அனுப்பலாம் என்றேன்.

தமிழ்த்துறையின்றி, வரலாற்றுத்துறையிலும் (Dept. of History), தத்துவத்துறையிலும் (Dept. of philosophy) எம். லிட். தேர்வுகளுக்கு நான் தேர்வாளனாக இருந்தேன். ஓர் ஆசிரியர், எம். லிட். தேர்வுக்காக ''சேக்கிழார் பெரிய புராணத்தின் வரலாற்றுச் சிறப்பு'' என்ற பொருள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையினை அனுப்பியிருந்தார். நானும் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ., (Retd. Assistant Secretary to Govt. of Tamilnadu) அவர்களும் அக்கட்டுரையின் தேர் வாளராக இருந்தோம். அக்கட்டுரை நன்றாக எழுதப்பட் டிருந்ததால், அந்த ஆசிரியருக்கு எம்.லிட். பட்டம் அளிக்கப் பட்டது. மற்றொருவர் தத்துவத்துறையில் சைவசித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான ''சிவப்பிரகாசம்'' என்பது பற்றி, நன்றாக ஆராய்ச்சி செய்தார். அவரது ஆராய்ச்சியினை நான் படித்து மிகவும் மகிழ்ந்தேன். உண்மையைக் கூறுமிடத்து, அந்த ஆராய்ச்சிக்கு எம். லிட். பட்டம் அன்றி, பி. எச்டி. பட்டமும் கொடுத்திருக்கலாம். அவ்வளவு சிறப்புடையதாக அமைந்தது அந்த ஆராய்ச்சிப் பகுதி. அந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு நானும், திரு. இராமலிங்கம், எம். ஏ. (இணைப் பேராசிரியர். தத்துவத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களும் தேவர்வாளராக இருந்தோம்.

பி.எச்டி. பட்டம் பெறுதற்குரிய ஒரு நேர்முகத் தேர் விற்கு நான் தலைவனாகவும், திரு டாக்டர் எஸ். வி. சுப்பிர மணியம் (Director, International Instiute of Tamil

Studies, Adayar) உறுப்பினராகவும் பணியாற்றினேன். சென்னைப் பல்கலைக் கழகம் அன்றி, அண்ணாமலைப் பல்கலைக் கழக எம் லிட். தேர்விற்கும் நான் தேர்வாளனாக இருந்தேன்.

## திருக்குறள் ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் நியமன உட்குழு

1968-ஆம் ஆண்டு இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது. மாநாடு முடிந்த பின்னர், அப்போது முதலமைச்சராக விளங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் என்ற மூன்று பல்கலைக்கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சித் துறை தொடங்குவதற்காக, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஓர் இலட்ச ரூபாய் கொடுத்தார். எனவே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சித் துறைக்காக ஒரு பேராசிரியரையும், ஒரு விரிவுரையாளரையும் நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு நிபுணர் குழு நியமித்தார்கள். நான் அக்குழுவில் ஓர் உறுப்பினனாக இருந்தேன். அக்குழுவிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் A. இலட்சுமணசுவாமி முதலியார் தலைவராக இருந்தார். டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்களும், வித்துவான் மு. சண்முகம்பிள்ளை அவர்களும் திருக்குறள் ஆராய்ச்சித்துறையில் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்ததால், தமிழக ஆளுநர் மைசூர் அரசர் ஜெயசாமராஜ உடையார் அவர்களுக்கு, நான் சில நாட்கள் தமிழ் கற்பிக்கும் ஆசிரியனாக இருந்தேன். பிறகு, அவர் ஐரோப்பா முதலிய மேனாடுகளுக்குச் செல்ல வேண்டி இருந்தது.

5

# பிற பணிகள்

## பிற பல்கலைக்கழகங்களின் தொடர்பு

அண்ணுமலைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக்கழகம் ஆகிய இவ்விரு பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பாடத்திட்டக்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றினேன். அண்ணுமலைப்பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் முதலிய பல்கலைக் கழகங்களின் வித்துவான், இண்டர் பி.ஏ., பி.காம்., பி ஓ எல்., எம்.ஏ முதலிய தேர்வுக் குழுவிற்கு உறுப்பினருகவும், தலைவருகவும் பணியாற்றி னேன். பல ஆண்டுகளுக்கு முன் வாரணுசி பல்கலைக்கழகத் தின் (Benares Hindu University) தமிழ்ப் பேராசிரியர் பதவி நியமனக் குழுவின் (Selection Committee) உறுப்பினருகப் பணியாற்றினேன். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த The Council for the Indian School Certificate Examinations என்ற நிறுவனத்தின் அறிவுரைக்குழு (Advisory Committee) உறுப்பினருகவும், அந்நிறுவனத்தின் தேர்வுக்குழு உறுப்பினருகவும் பல ஆண்டுகள் பணியாற்றி னேன். மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டக்குழுவின் (AcademicCouncil) உறுப்பினருகப் பல் கலைக்கழக வேந்தர், தமிழக ஆளுநர் அவர்களால் தமிழ் மொழிக்காக நான் 1976-ல் நியமிக்கப்பட்டேன்; தமிழ்ப் பேராசிரியர் நியமனக்குழுவின் (Selection Committee) உறுப்பினருகவும் பணியாற்றினேன்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் வித்துவான் தேர்வுக்குழு உறுப்பினருக (Examiner for Jaffna Oriental Studies Society-1948-50) நான் பணியாற்றினேன். சைவசித்தாந்தசமாஜம்நடத்தும்சைவப்புலவர்பட்டத் தேர்வுக்குழுவின் உறுப்பினருகப் பணியாற்றினேன். தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினன். சென்னை மாணவர் மன்றத்தின் துணைத்தலைவருள் ஒருவருகவும், சில ஆண்டுகள் காப்பாளருகவும், தேர்வுக்குழுத்தலைவருகவும் தொண்டாற்றினேன். திருவான்மியூரிலுள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் நினைவு நூல்நிலைய ஆட்சிக் குழுவின் உறுப்பினருகச் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். "The Madras School book Literary Society" என்ற நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினருகவும்; பொதுக்கூட்ட உறுப்பினருகவும் (Member of the ManagingCommittee, Member of the General body) பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றேன். நிறுவனத்திற்கு அனுப்பப்படும் புத்தகங்களின் தகுதி நோக்கி, இந்நிறுவனம் அப்புத்தக ஆசிரியருக்குப் பண உதவி அளிக்கின்றது.

## தமிழக அரசாங்கக் கல்வித்துறைப் பணிகள்

1. 1941-45எஸ்.எஸ்.எல்.சி. தமிழ்ப் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினன். (Member of the S S.L,C. Tamil Advisory Committee)
2. 1942-ல் சென்னைப் பல்கலைக் கழக மெட்ரிகுலேஷன் தமிழ்ப்பாடத்திட்டத்தினை மாற்றி அமைக்கும் செயற்குழு உறுப்பினன். (Member of the Madras University Matriculation Re-organisation Tamil syllabus Committee)
3. தமிழக அரசின் கல்வித்துறைத் தமிழ்ப்பாடத்திட்டக் குழுவின் உறுப்பினன்; தலைவன். (Member and Chair-

man of the Tamil Nadu Government Text book Committee).

4. எஸ்.எஸ்.எல்.சி தமிழ்ப்பாட விளுத்தாள் குறிக்கும் குழுவின் உறுப்பினன்; தேர்வுக்குழு உறுப்பினன்.

5. தமிழக அரசின் பணியாளர் ஆணைக்குழுவினர் நடத்தும் தேர்வுக்குழு உறுப்பினன். (Member of the Board of Examiners for the examinations conducted by the Tamilnadu Public Service Commission.)

6. இந்து அறநிலைய ஆணையரின் கீழ் நடைபெறும் திருக்கோவில்களுக்குப் பணிபுரியும் தக்கார்களைத் (Executive Officers) .தேர்ந்தெடுக்கும் நேர்முகத் தேர்வாளர் குழுவின் உறுப்பினன்.

7. தமிழக அரசின் கல்வித்துறையில் அமைந்துள்ள முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலுள்ள பாடப் புத்தகங்களைத் திருத்தி அமைக்கும் நிபுணர் குழுவின் உறுப்பினன். (Member of the expert commitee appointed by the Tamilnadu Government to revise text books prescribed for first standard to tenth standard) தமிழக அரசின் கல்வித்துறையில் அமைந்துள்ள முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புக்குரிய தமிழ்ப் பாடப் புத்தகங்களைத் திருத்தி அமைக்கும் நிபுணர் குழுவின் தலைவன்.

## படைத்துள்ள நூல்கள்

1. "கட்டுரை விருந்து"—என்ற எனது நூல் 1947—ஆம் ஆண்டு, முதல் பதிப்பாக வெளிவந்தது. இரண்டு, மூன்று, நான்காம் பதிப்புகள் முறையே 1949, 1956, 1957 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. இந்நூல், சென்னை, அண்ணாமலை, கேரளா, ஸ்ரீவெங்கடேசுவரா,

மைசூர், உஸ்மானியா முதலிய பல்கலைக்கழகங்களின் இண்டர்மீடியட், பி.யு.சி. வகுப்புகளுக்கு உரைநடை பாடப்புத்தகமாக வைக்கப்பட்டது.

2. "இயற்றமிழ்" என்ற எனது நூல் 1963ல் முதல் பதிப்பாக வெளிவந்தது. 1964ல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. இந்நூல், சென்னை, அண்ணாமலை முதலிய பல்கலைக்கழகங்களில் இளங்கலை (B.A.) வகுப்புக்குப் பாடமாக அமைக்கப்பட்டது.

3. "தோத்திரப்பாக்களில் காணும் இலக்கியநயம்" (Literary beauties in the Hymns of Nayanmars, Alwars and other Saints) என்ற பொருள் பற்றி நான், 1968-ஆம் ஆண்டில் மூன்று நாட்கள் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில், சென்னைப்பல்கலைக் கழகத்தில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் வெள்ளிவிழா அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றினேன் இச்சொற்பொழிவுகள் முதல் பதிப்பாக சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது.

4. "சென்னைக் கந்தகோட்டத் தல வரலாறும் திருவருட் பாடல்களும்" என்ற நூல், என்னால் எழுதப்பெற்று, ஸ்ரீ கந்தகோட்டத் தேவஸ்தானத்தாரால் 1980-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில், வரகவி. கிருஷ்ணப்ப செட்டியார் எழுதிய "சென்னை ஸ்ரீ செல்வக் கந்தநாதர் தலபுராணம்" என்ற நூலுக்கு யான் பொழிப்புரையும், கதை சுருக்கமும் எழுதியுள்ளேன். அதுவன்றி, கந்த கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கந்தப்பெருமான் மீது ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் பாடியருளிய தெய்வ மணிமாலை, கந்தர் சரணப்பத்து என்ற பாடல்களையும், ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள், ஸ்ரீ பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் ஆகிய இருவரும் கந்தப்பெருமான் மீது பாடியருளிய பாக்களில் சிலவற்றைத் தொகுத்தும் இதில்

சேர்த்துள்ளேன். கந்தகோட்டத்தைப்பற்றிய முழு வரலாற்றை அறிதற்கு இந்நூல் துணை செய்யும்.

## வெளியிடப்பட்ட கட்டுரைகள்

1. நெடுநல்வாடை - Annamalai University miscellany—1933.
2. பன்றி இறைச்சியின் மாட்சி - ஒரு சிறுகதை - Annamalai University miscellany—1933.
3. The Village Administration of the Cholas as depicted in the inscriptions of Paranthaka - Madras Christian College Magazine—1937.
4. வாதவூரடிகளும், இராமலிங்க அடிகளும்-சித்தாந்தம்—1938.
5. திருவாசகத்துள் ஒன்பான் சுவைகள்-சித்தாந்தம் ஜுன்-நவம்பர்—1940.
6. அகநானூறு - மருதம் - அகநானூற்றுச் சொற்பொழிவுகள்—கழகம், 1940.
7. "நின்னினும் நல்லன்" - தமிழ்க்கலை ஆண்டுமடல்—1940.
8. கவியுள்ளமும் கலை ஞானமும் - பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார் அவர்கள் மணிவிழாமலர்—1942.
9. இங்கிதமாலை - திரு கோபால கிருஷ்ணமாச்சாரியார் மணிவிழாமலர்—1942.
10. நம் பொது நிலையங்கள் - பேரிளைவசியன் ஆண்டுமலர்—1942-43.
11. இலக்குவன் சீற்றம் - திரு. வி. க. மணிவிழா மலர்—1943.
12. அப்பர் அறவுரை - திரு. நாகலிங்க முதலியார் முத்து விழாமலர்—1944.

13. புறநானூறும் இலக்கியமும் - புறநானூற்றுச் சொற் பொழிவுகள் – கழகம், 1944.

14. முற்காலத்தமிழ் இசை - (கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்) தமிழ் இசைக் கழகத்தின் இசை மலர்—1946.

15. திருமந்திரமும் நாலடியாரும்-சித்தாந்தம்—1946.

16. ஒரு வாசகம் - திருவள்ளுவர் நினைவுமலர், திருச்சிராப் பள்ளி—1947.

17. என் உயர்நிலைப்பள்ளி - Muthialpet High School centenary souvenir—1947.

18. சுவாமி விபுலானந்தர்-"ஈழமணி"-கொழும்பு—1948.

19. கோசலையின் பண்பு - "ஈழகேசரி" - சுன்னாகம்-இலங்கை — 1949.

20. கம்பரும் உடன்பிறந்தார் ஒற்றுமையும் - யாழ்ப்பாணம் ஆரியத்திராவிட பாஷாபிவிருத்தி சங்க வெள்ளி விழா மலர்—1950.

21. கம்பர் காவியத்தில் ஓர் ஓவியம்-புதுவைக் கல்விக் கழகத் தின் வெள்ளிவிழாமலர் —1951.

22. வரலாறும் வாழ்த்துரையும் - "ஆயிர வைசியன்" மாத இதழ் ஜுன்—1951.

23. திருமந்திரமும் அறநூல்களும்-தமிழ்நாடு-மதுரை—1955.

24. நம்பியும் நகைச்சுவையும் - 'சித்தாந்தம்' பொன்விழா மலர்—1955.

25. அரசும் அறநெறியும்-தமிழ்நாடு-மதுரை—1956.

26. மறுமலர்ச்சி உரைநடை-மதுரைத் தமிழ்ச் சங்க பொன் விழாமலர்—1956.

27. இருபெருங்கோயில்கள் - சிதம்பரம் ஸ்ரீ நடராசப் பெருமான் கும்பாபிஷேக மலர்—1956.

28. கம்பரின் நினைவாற்றல் - மாணவர் மன்ற வெள்ளிவிழா மலர்—1957.

29. மக்கட்பேறு - "தமிழ் முரசு" பொங்கல் மலர்-மலேயா—1958.

30. கற்பின் கொழுந்து - திரு கி ஆ பெ. விசுவநாதம் மணி விழா மலர்—1958.

31. சுந்தரரும் ஒன்பான் சுவைகளும்-சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக 1008-வது வெளியீட்டு விழாமலர்—1961.

32. சமூக வளர்ச்சி-ஆயிரவைசிய மாநில மாநாட்டு மலர்—**1961.**

33. எங்கள் ஆசிரியப் பெருந்தகை - டாக்டர். ரா. பி. சேதுப் பிள்ளை வெள்ளி விழாமலர் (Dr R.P. Sethu Pillai Silver Jubilee Souvenir)— 961.

34. அடிகளும் தொண்டரும்-தருமபுர ஆதீன கனகாபிஷேக விழாமலர்—1961.

35. ஏழைபங்காளர்-Sri Kamaraj 60th Birthday Commemoration Volume—1962.

36. The Origin and Development of Tamil prose, Bharathi Sathabishega Souvenir - Bharathi Tamil Sangam Calcutta—1962.

37. ஆளுடைய அரசும் அறநெறியும் - திருவாரூர் கும்பாபிஷேக மலர்—1963.

38. சொல்லும் பொருளும் - மகாவித்துவான் திரு. மே வீ. வேணுகோபால் பிள்ளை 68-வது பிறந்தநாள் விழாமலர்—1963.

39. இனி நமக்கு வேண்டுவன யாவை? - Tambaram Municipality Inaugurations Souvenir.—1964.

40. மற்றொரு மணிப்பிரவாளம் வரும்-முரசொலி—1964.

41. வாலியின் வற்றுத அன்பு - கலைக்கதிர் - பொங்கல் மலர் கோயம்புத்தூர்—1965.

42. Modern Trends in poetry-India International Centred Madras University Branch Seminar Literature Group —1965.

43. இங்கிதமாலை-சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நூற்றுண்டு விழாமலர்—1965.

44. ஆக்கம் அளிக்கும் அரசர்பிரான் - டாக்டர். ராஜாசர் முத்தையா செட்டியாரின் 60-வது பிறந்தநாள் விழா மலர்—1965.

45. சமூக வளர்ச்சி-ஆயிரவைசியன், ஆகஸ்ட்—1965.

46. குடும்ப வழிபாடு-அழகரடிகள் மணிவிழா மலர்—1965.

47. அருணகிரிநாதர் அறவுரை - பேராசிரியர் கோ. சுப்பிரமணியனுர் மணிவிழாமலர்—1966.

48. திருக்குறளுக்கு எல்லீஸ் உரை-மதுரைத் திருவள்ளுவர் கழகம் வெள்ளிவிழாமலர்—1967.

49. இளங்கோவடிகள் காப்பியப் பண்பு-தமிழ் நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றுண்டு விழாமலர்—1967.

50. உழைப்பால் உயர்ந்தவர் - பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார் மணிவிழாமலர்—1967.

51. அப்பர் அருள்வாக்கு - முருக. தனுஷ்கோடி மணிவிழா மலர்—1967.

52. முனிவரின் மாண்பு-ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் வெள்ளிவிழா மலர்—1967.

53. முத்தமிழ் அறிந்த வித்தகர்-பி.எஸ். செட்டியார் நினைவு. மலர், 1967.

53. The Concept of God as depicted in Saiva Siddhantam-A Glimpse of Tamilology—1968.

54. அப்பர் அறவுரை-திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை விழாமலர்—1969.

55. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை - திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாமலர்—1969.

56. திருப்போரூர்ச் சந்நிதி முறை - தவத்திரு. பன்றிமலை அடிகளார் அருட்பணி இயக்கம் சிறப்பு மலர்—1969.

57. அப்பரும் பட்டினத்தடிகளும் - ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூசைவிழா மலர்—1970.

58. முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் - புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர்—1970.

59. திருக்கோயில்களின் தற்கால நிலை - இந்து தேவாலயப் பாதுகாப்பு மாநில மாநாடு, சேலம், சிறப்புமலர்— 970.

60. பொதுமறை - திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுநிறைவு விழாமலர்—1970.

61. வள்ளுவர் காட்டும் அறநெறி - ஆயிரவைசிய சங்க இலவச வாசகசாலை & நூல்நிலையம், விருதுநகர், பொன் விழா சிறப்பு மலர்—1970.

62. மருதவாணர் மாண்பு - திருவிடை மருதூர் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி கோயில் மகா கும்பாபிஷேக மலர்—1970.

63. முத்தமிழ்ப் புலமைமிக்க வித்தகர் திரு. அவ்வை. சண்முகம் மணிவிழாமலர்—1972.

64. சமய ஒழுக்கம் - அரியலூர் மணிவாசக மன்ற வெள்ளி விழாமலர்—1972,

65. அடியார் கூட்டுறவு - புரசைத் திருநெறிக்கழக வெள்ளி விழா சிறப்புமலர்—1972

66. சமயம் வீட்டில் வளர வேண்டும் - இளையான்குடி ஸ்ரீ ராஜேந்திர சோழீஸ்வரர் ஸ்ரீ மதனவேணுகோபாலப் பெருமாள் ஆலயங்களின் திருக்கும்பாபிஷேக மலர்—1972.

67. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் - திருப்பணிச் செல்வர். செ ரெத்தினசாமி செட்டியார் வரலாற்று நினைவு மலர் — 1972.

68. அபிராமி அந்தாதி - சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில், ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் திருக் கும்பாபிஷேக மலர்—1972.

69. அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும் - திருப் பாதிரிப்புலியூர் ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ பாட லேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் —1973.

70. சைவமும் தமிழும் தழைக்க உழைக்கும் செம்மல் - தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலர்—1973.

71. தேர் உலாவிய தில்லையுள் கூத்தன் - சிதம்பரம். R. கனகசபைப் பிள்ளை மணிவிழா மலர்—1973.

72. இராமலிங்க அடிகளார் அருளிய அறிவுரை - கட்டுரைப் பொழில் மணிவிழா மலர்—1973.

73. சங்கத் தமிழும் சைவசமய குரவர்களும் - திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் மணிவிழா மலர்—1974.

74. திரு.வி.க.வின் அரசியல் நூல்கள் - இந்திய விடுதலையும், தமிழ் இலக்கியமும் பற்றிய கருத்தரங்கு - சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு—1974.

75. எத்தகைய கல்வி வேண்டும்?- சிதம்பரம். ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாசாலை உயர்நிலைப்பள்ளி வெள்ளி விழாமலர்—1975.

76. மேருவரையின் மேம்பட்ட தவத்தான் - அருள்மிகு. திருத்தொண்டீஸ்வரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்—1979.

77. வாழ்த்துரை - திருவையாறு புலவர். திரு. கோ. சுப்பிர மணியனார் அவர்களின் 50-வது ஆண்டு நிறைவு பொன் விழா சிறப்பு மலர்—1979.

78. வாழ்த்துரை - Dr. Rathnavel Subramanian's Services Silver Jubilee celerbation Souvenir—1980.

79. மேலூர் திருவிடை அம்மன் கோயில் வரலாறு, சித்தாந்தம்—1980.

80. சைவ சமயத் திருக்கோவில் வழிபாட்டு முறைகள், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழக வரலாற்றுப் பண்பாட்டுக் கருத்தரங்கில் படித்த கட்டுரை.

## மாநாட்டில் ஆற்றிய தலைமை உரைகள்

1. 1937-ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த இளைஞர் மாநாட்டுத் தலைமை உரை.
2. ஆயிர வைசிய இளைஞர் மாநாட்டுத் தலைமை உரை - சென்னை — 944.
3. 1980 மே-ஆரணியில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாஜ 74-வது மாநாட்டில் ஆற்றிய தலைமை உரை.

## வானொலிப்பேச்சு

1. இலக்கியமும், கலைகளும்—கபிலர்.
2. காவியம் எழுதாத கவிகள்—படிக்காசு தம்பிரான்.

3. பொய்யாமொழிப் புலவர்.
4. குலசேகரர் பாசுரங்கள்.
5. பெருந்தேவனார் பாரதம்.
6. கடவுளைப்பாடும் நூல்கள்—தேவாரம்.
7. சிறந்த பாத்திரங்கள்—கண்ணகி.
8. பிரபந்தங்கள்—நான் மணிமாலை.
9. இலக்கிய வகைகள்—இதிகாசம்.
10. சிறந்த ஆசிரியர்கள்—புகழேந்திப் புலவர்.
11. மகாபாரதத்தில் ரசமான கட்டங்கள்—கீசகன் வதம்.
12. பாரதம் பாடிய கவிகள்—வில்லிபுத்தூரார்.
13. வழிவகுத்தவர்—இராமலிங்க சுவாமிகள்.
14. காவியக் கதைகள்—நந்தர் கதை.
15. சமயங்கண்ட தமிழ்—திருத்தக்க தேவர்.
16. இலக்கியம் ஆக்கிய கவிகள்—நப்பூதனார்.
17. பிரபந்தங்கள்—ஆற்றுப்படை.
18. திருவருட்பா.
19. விசுவாமித்திரர்.
20. பாசுரக்கவிகள் மாணிக்கவாசகர்.
21. இடைக்காலத்தில் தமிழ்க்கவிகள்—ஒட்டக்கூத்தர்.
22. தமிழ் வளர்த்த மூவேந்தர்—பண்டை இலக்கியம்—பாண்டியர்.
23. கவிதாவாசகம்—ஐம்பெருங்காப்பியங்கள். அரசு அமைச்சு—மக்கள்.
24. தெனாலிராமன்.
25. தமிழில் உரைநடை-மணிப்பிரவாளம்.
26. மொழி வளர்ச்சி—இல்குவாக்கல்.

V.49S

27. தமிழ் வசனம் ஆசிரியர்—இராஜம் ஐயர். MADRAS-41,

28. இயல்தமிழ் – பொருள்—தொல்காப்பியம்.

## சிறப்புச் சொற்பொழிவுகள்

1. 9-11-40-ல் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில், சென்னைப் பல்கலைக் கழக மன்றத்தில் "திருவாசகத்தில் நவரசம்" என்ற பொருள் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழக விரிவுப் பணி சொற்பொழிவினைச் செய்தேன்.

2. 23-3-48-ல் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில், "சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கும் பண்டைத்தமிழ் மக்களின் நாகரிகம்" என்ற பொருள் பற்றிப் பேசினேன். (விரிவாக்கப்பணி சொற்பொழிவு)

3. 1952-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எல்லீஸ் திருக்குறள் பதிப்பினைப் பற்றி மூன்று நாட்கள் சிறுப்புச் சொற்பொழிவாற்றினேன்.

4. 1963-ல் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பாரதியார் பிறந்த நாள் விழாவில், தலைமை வகித்து தலைமைப் பேருரை ஆற்றினேன்.

5. 1947-ஆம் ஆண்டு முதல் சென்னைக்கடுத்த கிண்டியிலுள்ள ஸ்ரீ மல்லிகேசுவரர் ஸ்ரீ கேசவப்பெருமாள் தேவஸ்தான மணலி அறக்கட்டளைகளின் சார்பில் நடத்தப்படும் கல்லூரி மாணவர் இலவச விடுதியில் ஞாயிறு தோறும் திருக்குறள், திருவாசகம், கந்தரனுபூதி முதலியவை பற்றிய வகுப்புகள் 15 ஆண்டுகள் நடத்தினேன்.

இவைகளேயன்றி, தென்னிந்தியாவிலுள்ள பல இலக்கியக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் சைவசமய சபைகளிலும், இலங்கையிலுள்ள இலக்கிய மன்றங்களிலும், சைவசமய சபைகளிலும் சொற்பொழிவாற்றியுள்ளேன்.

## 6

# பொதுநலத் தொண்டு

### சமூகத்தொண்டு

நான் மாணவனாக இருந்தபோது, சென்னை வைசிய குல பேரி செட்டிமார் சங்கச் சார்பில் நடைபெற்ற நாடகங்களில் சிறந்த பங்கு பெற்றேன் அவ்வாறு நடித்ததால், என் பேச்சு வன்மை சிறப்புற்றது. சங்கத்தின் பொருளாதாரத்திற்காக, மாணவர்களாக இருந்த நாங்கள் பொங்கல் நாளன்று, நமது சமூகத்தவர்களின் வீடுகள்தோறும் உண்டிப்பெட்டி எடுத்துச் சென்று, பொருள் திரட்டி வந்தோம். 1934 ல் நான் தமிழ் பி ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றவுடன், சென்னை வைசிய குல பேரி செட்டிமார் சங்கத்தின் செயற்குழு உறுப்பினனாக நியமிக்கப்பட்டேன். அச்சங்கத்தின் சார்பில், நாங்கள் ஏழை மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் அளித்து வந்தோம். திரு.தி.தி. சொக்கலிங்கம், திரு.கே.என். சீனிவாசன் முதலிய அன்பர்கள் நம் சமூக வளர்ச்சிக்காக ''பேரி வைசியன்'' என்ற ஒரு திங்கள் வெளியீட்டினை நடத்தி வந்தார்கள். அதில் நம் சமூக முன்னேற்றம் பற்றிப் பல கட்டுரைகள் எழுதிவந்தேன். 1944-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற ஆயிரவைசியர் இளைஞர் மாநாட்டுக்கு நான் தலைமை தாங்கினேன்.

இவை அல்லாமல், பரமக்குடி, இளையான்குடி முதலிய இடங்களில் நடைபெற்ற ஆயிரவைசிய சங்கங்களின் ஆண்டு விழாவில் சொற்பொழி வாற்றினேன். தஞ்சையிலும், திருவொற்றியூரிலும் நடைபெற்ற ஆயிரவைசிய மாநாட்டில் சொற்பொழிவு ஆற்றி, சிறந்த பங்கு பெற்றேன். சென்னை தருமசிவாசாரியார் மடத்தின் ஆயுள் அறங்காவலர் குழுவின்

உறுப்பினருக 1934-ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றேன். மேலும், நெருஞ்சிப்பேட்டை ஸ்ரீ அகோரதரும சிவாசாரியார் ஆயிரவைசிய மடத்தின் அறங்காவலர் குழுவில், செங்கற்பட்டு மாவட்டத்தின் பிரதிநிதி உறுப்பினருக ஐந்தாண்டுகள் பணியாற்றினேன். தமிழகத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பொறியியற் கல்லூரிகளிலும் படிக்கும் ஆயிரவைசிய குலத்தைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு, ஒரு மாவட்டத்திற்கு ரூ. 1000 வீதம், 12 மாவட்டத்திற்கும் 12,000 ரூபாய், ஐந்தாண்டுகள் வரை, 'உபகார சம்பளம் வழங்கிவந்தோம். அம்மடத்தின் எதிரில் ஒரு திருமண மண்டபமும் கட்டிஞேம். அம்மடத்தில் மாதந்தோறும் நடைபெறும் அறங்காவலர் கூட்டத்திற்கு நான், திரு. ஓ இராதாகிருஷ்ணன், பி.ஏ.பி.எல் , திரு.வி.ஆர் சௌந்தரராஜன், பி.எஸ்.சி. என்ற மூவரும் நெருஞ்சிப் பேட்டைக்குப் போவதுண்டு. மடத்தில் குருபூசை விழாவும், மடத்தைச் சார்ந்த ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விசுவநாதர் கோயில் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றன.

அப்போது மடத்தின் அறங்காவலர் குழுவின் உறுப்பினராக இருந்த திரு மதுரை. ஏ எஸ்.எஸ்.எம். சோமசுந்தர செட்டியார், திரு. மதுரை. பி.எஸ்.ஜி. கணபதி செட்டியார், பரமக்குடி. திரு. சண்முகசுந்தரம் செட்டியார் சேலம். இளம்பிள்ளை ஜமின் திரு. இராஜகுருநாதன் செட்டியார், எம்.எல்.ஏ., சேலம். திரு மாணிக்க செட்டியார் முதலியோரின் நட்பினை நான் பெற்றேன். சட்டப்படி, நெருஞ்சிப்பேட்டை மடத்தின் அறங்காவலர் குழுத் தேர்தல் ஐந்தாண்டுக்கொருமுறை நடைபெறும். அடுத்து வந்த தேர்தலில், எனக்குப் பதிலாக செங்கற்பட்டு மாவட்ட பிரதிநிதியாக, என் நண்பரும் இசைமணி, சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் சிறிய தந்தையுமான திரு.

பி எஸ். செட்டியார் அவர்கள் இருக்கும்படியாகச் செய்தேன். திரு பி.எஸ் செட்டியார் அவர்கள் நடத்தி வந்த "ஆயிர வைசியன்" என்ற திங்கள் வெளியீட்டுக்கு நான் பல கட்டுரைகள் எழுதியதுண்டு.

நான் 1931-34 வரை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் படித்த பொழுது எங்கள் தமிழ்த்துறைத் தலைவர் திரு. விபுலானந்த அடிகளார் கட்டளைப்படி, மாணவர்களாகிய நாங்கள் அண்ணுமலை நகருக்கு அடுத்துள்ள திருவேட்களத்திலுள்ள அரிசன் காலனிக்கு வாரத்தில் மூன்று நாட்கள் சென்று,அங்குள்ள அரிசன சிறுவர்களுக்கு மாலைநேரத்தில் வகுப்புகள் நடத்திவந்தோம். சென்னைத் திருவல்லிக்கேணி கூட்டுறவு சங்கத்தின் கிளைச் சங்கம் ஒன்று தாம்பரத்தில் உள்ளது. நியாயவிலைக் கடையாகிய அந்தக் கிளைச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினனுகவும், பஞ்சாயத்து உறுப்பினனுகவும் நான் ஐந்தாண்டுகள் பணியாற்றினேன். எங்கள் காலத்தில் அக்கிளைச் சங்கத்திற்கு ஒரு கட்டடமும் கட்டி முடித்தோம். சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலுள்ள பணியாளர் சங்கத்திற்கு (M. C. C. Service staff Association) நான் பல ஆண்டுகள் பொருளாளனுகவும், தலைவனுகவும் பணியாற்றினேன். நான் அச்சங்கத்திற்குத் தலைவனுக இருந்த காலத்தில், எங்கள் கல்லூரி முதல்வர் உதவியாலும், தாம்பரம் பஞ்சாயத்து சங்கத்தலைவர் உதவியாலும் எங்கள் பணியாளர்கள் வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்காக இனமாக நிலம் வழங்கப்பட்டது. சிறையினின்று விடுவிக்கப்பட்ட சிறைவாசிகளின் மறுவாழ்வு சங்கம் (The Tamilnadu Discharged Prisoner's aid Society Madras) சென்னை அண்ணுசாலையில் ஒன்றுள்ளது. அச்சங்கத்திற்குத் தமிழக தலைமைச் செயலாளர்தான் தலைவர். அச்சங்கத்தின் பொதுக்கூட்ட உறுப்பினருள் நான் ஒருவனுகப் (Member of the General body of the Society) பணியாற்றி

வருகின்றேன். சிறையினின்றும் விடுவிக்கப்பட்டவர்கள் கைத்தொழில்கள் மூலம் பொருள் ஈட்டி, சிறப்பாக வாழ்க்கை நடத்துவதற்கு இச்சங்கம் பல தொழில் முறைகள் வகுத்துள்ளது. இத்தலைமைச் சங்கத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் கிளைச்சங்கம் உண்டு.

சென்னைக் கிறித்துவக் கல்லூரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் பல்லாவரத்திற்கடுத்த பம்மல் என்ற கிராமத்தில், தொழுநோயாளர் பிணி நீக்கும் சங்கம் (Leprosy relief centre) ஒன்று தொடங்கப்பட்டது. அதில் வாரத்திலொரு முறை, சில கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் அங்குச் சென்று, தொழுநோயாளர்களுக்கு, நோயைப் போக்க மாத்திரைகளும், பால்பவுடர்களும் வழங்குவதுண்டு. அத்தகைய பணியில் நானும் சில நாட்கள் ஈடுபட்டிருந்தேன். சென்னைக் கிறித்துவக்கல்லூரிப் பேராசிரியரின் மனைவியர் சங்கம் (M. C. C. Staff wives fellowship) ஒன்றுள்ளது. அவர்கள் சிறந்த சமூகசேவை செய்து வருகின்றனர். தமிழ் நாட்டிலும், வடநாட்டிலும் ஏற்பட்ட வெள்ளத்தால் அவதியுற்ற மக்களுக்குத் துயர்துடைப்புப் பணியாக இச்சங்கத்தார் பொருளும், துணிமணிகளும் பலரிடம் சேகரித்து அனுப்பி வருகின்றனர். அத்துறையில் என் மனைவியும் சிறந்த பங்கு பெற்றாள். அதற்கு நானும் உறுதுணையாக இருந்தேன்.

## சமயத்தொண்டு

எனது அருமைத் தந்தையார் பூரிப்பாக்கம் வேலு செட்டியார் அவர்கள், சென்னை. சிவனடியார் திருக்கூட்டம், ஸ்ரீமல்லிகேசுவரர் திருத்தொண்டர்சபை முதலிய சபைகளில் உறுப்பினராய் இருந்து, சிவத்தொண்டில் ஈடுபட்டிருந்தார். தம்மைப்போல் எங்களையும் சைவசமயநெறியில் நிற்கும்படி அவர் வழிகாட்டினார். நான் சென்னை முத்தியாலுப் பேட்டை

உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்பொழுது ஸ்ரீஉமாமகேசுவரர் சபையில் சேர்ந்து, அச்சபையின் சார்பில் நடைபெற்ற தேவார வகுப்பில் கலந்து கொண்டு பண்முறையோடு தேவாரம் கற்றேன். எனது விடுமுறை நாட்களில் ஸ்ரீமல்லிகேசுவரர் ஆலயத்தில் உள்ள பூந்தோட்டத்திற்குச் சென்று, பூக்கள் பறித்து மாலையாகத்தொடுத்துக் கொடுப்பது வழக்கம். 1923-ஆம் ஆண்டில் சென்னை முத்தியாலுப் பேட்டை ஸ்ரீமல்லிகேசுவரர் ஆலய தீபகைங்கர்ய சபையினைத் தொடங்கினேன். அதன் சார்பில் மாணவர்களாகிய நாங்கள் ஸ்ரீமல்லிகேசுவரர் ஆலயத்தில் நாள்தோறும் 10 பலம் கடலெண்ணெய் கொண்டு, கோவில் சுற்றிலும் தீபம் ஏற்றி வந்தோம். கோவிலில் நடைபெறும் பிரதோஷ உற்சவத்தில் நானும் சில அன்பர்களும் சுவாமிக்குப் பின்னால் பன்னிரு திருமுறையை இசையுடன் பாடி வந்தோம். அத்திருக் கோவிலில் நாங்கள் அச்சபையின் சார்பில் அமாவாசை தோறும் சுவாமி, அம்பாள், கைலாசநாதர், சூரியன் என்ற நான்கு திருவுருவங்களுக்கும் அபிஷேகம் செய்வதுண்டு.

1937-ல் தாம்பரத்திற்கு வந்த பிறகு ஒரு சாமியாரை அக்கோவிலில் தீபம் ஏற்றுவதற்காக ஏற்பாடு செய்தேன். அவருக்கு மாதந்தோறும் சம்பளமும், தீபாவளிக்குத் துணியும் கொடுக்கின்றோம். இத்தீபகைங்கர்ய சபையின் ஆண்டு விழாவானது சிவராத்திரியன்று நடைபெறும். அன்று எல்லா உறுப்பினரும் கோவிலுக்கு வந்து, இரவில் நடைபெறும் நான்குகால பூசையும் தரிசித்து, இரவு முழுதும் தீபம் ஏற்றி வருவதுண்டு. இத்தீபகைங்கர்யம் கடந்த 58 ஆண்டுகளாகத் தொடர்ந்து இறைவனருளால் நடைபெற்று வருகின்றது இத்தீபகைங்கர்யம் தொடர்ந்து நடைபெறுவதற்காக, சென்னையில் ஒரு சிறிய வீடு பல ஆண்டுகளுக்கு முன்பே வாங்கி வைத்தேன். அதன் வாடகையைக்கொண்டும் உறுப்பினர் கொடுக்கும் மாதசந்தாவினைக் கொண்டும் இந்த

TIRUVANMIYUR MADRAS-4

தீபகைங்கர்யம் நடைபெற்று வருகின்றது. நான் கல்லூரியில் ஆசிரியனாகப் பணியாற்றும் போதெல்லாம், சபையின் உறுப்பினர் இல்லத்திற்குச் சென்று, தீபத்திற்காக மாத சந்தா பெற்றுவருவதுண்டு. நான் கல்லூரியினின்று ஓய்வு பெற்ற பிறகு, என் இளையமகன் நடராசன் அந்த உறுப்பினர் களைச் சந்தித்து, மாதசந்தா பெற்றுவந்தான். அவனுக்குத் திருமணமான பின்பு, 1981 ஜூன் மாதத்திலிருந்து உறுப் பினரைக் காண அவனால் இயலாமையினால், உறுப்பினரிடம் சந்தா வாங்குவது நிறுத்தப்பட்டது. வீட்டு வாடகையைக் கொண்டே தீபகைங்கர்யமும் அமாவசை அபிஷேகமும் நடை பெற்று வருகின்றது. இப்போது மாதந்தோறும் 10 கிலோ கடலெண்ணெய் ஸ்ரீமல்லிகேசுவரர் கோவிலில் தீபம் ஏற்று வதற்காக வாங்கி வருகின்றோம். நான் ஸ்ரீஉமாமகேசுவர சபையினர் நடத்திவரும் அறுபான்மூவர் நாயன்மார் திருநட்சத்திர விழாவிலும் நால்வர் திருநட்சத்திர விழாவிலும் கலந்துகொள்வதுண்டு. ஆண்டுதோறும் நடை பெறும் நால்வர் உற்சவத்தில் நால்வருக்குப் பின்னால், நாங்கள் வீதியில் தேவார பாராயணம் செய்து வருவதுண்டு.

**சமாஜம்**

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் செயற்குழு உறுப்பினனாக 1934-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை கடந்த 40 ஆண்டுகளாகப் பணியாற்றினேன். சமாஜம் நடத்தும் மாதக்கூட்டங்களிலும், ஆண்டு விழாக்களிலும் சொற்பொழிவாற்றியுள்ளேன். 1937-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த மாநாடு காஞ்சிபுரத்தில் நடந்த பொழுது சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினேன். பின்னர் 1980-ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆரணியில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ 74-ஆம் ஆண்டு விழா மாநாட்டுக்கு, நான் தலைமை தாங்கினேன்.

எனது தலைமைப் பேருரைப் பல்லோராலும் பாராட்டப் பட்டது. அத்தலைமைப் பேருரைபற்றி ஆங்கில சித்தாந்தத் திலும், தமிழ் சித்தாந்தத்திலும் இதழ் ஆசிரியர்களால் பாராட்டுரைகள் வெளியிடப்பட்டன. நான் சைவசித்தாந்த சமாஜத்தின் சார்பில் வெளிவரும் திங்கள் வெளியீடான தமிழ் சித்தாந்தத்திற்கு ஆயுள் உறுப்பினனுகவும், பருவந் தோறும் வெளிவரும் ஆங்கில சித்தாத்திற்கு உறுப்பின னுகவும் இருக்கின்றேன். தமிழ் சித்தாந்தத்திற்கும் ஆங்கில சித்தாந்தத்திற்கும் அவ்வப்பொழுது கட்டுரைகள் வழங்கி யுள்ளேன்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மாதக்கூட்டம் தாம்பரத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திருப்புகழ் பாடல் பெற்ற மாடம் பாக்கத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார், தாம்பரம் திரு. ச. நடேச முதலியார் முதலிய பல அன்பர்கள் வந்திருந்தனர். மாடம் பாக்கத்தில் தரிசனமும், கூட்டமும் முடிந்தபின்னர், கூட்டத் திற்கு வந்திருந்த அனைவருக்கும் அடியேனுடைய இல்லத் தில் மகேசுவர பூசை நடைபெற்றது.

தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன சமய பிரசார நிலையத்தின் சார்பில் 1969-ஆம் ஆண்டு மே திங்களில், திருநாவுக்கரசர் திருவவதாரத்தலமாகிய திருவாமூருக்கு 81 சிவனடியார்கள் பாதயாத்திரையாகச் சென்றூர்கள். அவர் கள் மாம்பலத்திலிருந்து புறப்பட்ட நாளில் பகல் 10 மணி அளவில் தாம்பரத்திற்கு வந்து சேர்ந்தனர். அக்கூட்டத்தில் அப்போது மாம்பலம் தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தின் தலைவராக இருந்த தவத்திரு. சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள், பேரூர் கௌமாரமடத்தின் தலைவராகிய தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகள், திருவருட்பா வித்தகர் தவத்திரு ஊரனடிகள் முதலிய பெருமக்கள் கலந்

திருந்தனர். இவர்கள் முன்னிலையில் அடியேனுடைய இல்லத்தில் 81 சிவனடியார்களுக்கும் சிறப்பாக மகேசுவர பூசை நடைபெற்றது.

சைவசித்தாந்த சமாஜத்தின் சார்பில் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள், அடியேனுடைய இல்லத்தில் ஆறும் திருமுறை முற்றோதல் காலை முதல் மாலை வரை நடைபெற்றது. அன்று முற்றோதலில் கலந்துகொண்ட அன்பர்களுக்கெல்லாம் அடியேனுடைய இல்லத்தில் மகேசுவர பூசை நடைபெற்றது. அப்போது, மகேசுவரபூசை செய்யும் முறை பற்றி ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டது.

## தலயாத்திரை

"நாடு நகரமும் நற்றிருக் கோவிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

—திருமந்திரம்

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்தொடங்கியவர்க்கு
வார்த்தை சொல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே"

—தாயுமானவர்

என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப, நான் இறைவன் திருவருளால் தேவாரம் பாடல்பெற்ற 274 திருத்தலங்களுள் பலவற்றைத் தரிசித்த பேறு பெற்றுள்ளேன். புரசைத் திருநெறிக்கழகம், தருமபுர ஆதீனப் பிரசார நிலையம், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், தாம்பரம் அடியார் திருக்கூட்டக்கிளைச் சபை முதலிய சபைகள் சார்பில், நடைபெற்ற திருத்தல வழிபாட்டில் நான் கலந்து கொண்ட தன் பயனாக, பாடல்பெற்ற 274 திருத்தலங்களில் சற்று ஏறக்குறைய 250

திருத்தலங்களைத் தரிசித்துள்ளேன். இவை அல்லாமல், காசி, நேபாளம் (பசுபதிநாத்), கயா, பத்ரிநாத் முதலிய வட நாட்டுத் தலங்களையும், டில்லி, ஆக்ரா, சாரணாத், அலகாபாத், கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களையும் பார்த்துள்ளேன்.

இலங்கையிலுள்ள திருக்கேதீஸ்வரம், திருக்கோணமலை, கதிர்காமம் முதலிய தலங்களைத் தரிசித்து, கொழும்பு யாழ்ப்பாணம் முதலிய இடங்களையும் பார்த்து வந்தேன். நான் இத்தலங்களுக்குப் போனபொழுது பெரும்பாலும் என் வாழ்க்கைத் துணைவியோடு சென்றுள்ளேன். இவையன்றி சமயச் சொற்பொழிவு, இலக்கியச் சொற்பொழிவு காரணமாக நான் பல்வேறு ஊர்களுக்குத் தனியாகச் சென்றபோது அவ்வூர்களின் பக்கத்திலுள்ள பாடல் பெற்ற தலங்களையும் தரிசித்துள்ளேன். மேலும், உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய கோடைகால வாசஸ்தலங்களையும் கண்டுள்ளேன். பாடல் பெற்ற தலங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தரிசித்த பலன் 12 ஆண்டுகள் சிவபூசை செய்த பலனுக்கு சமமாகும்எனக் கூறுவர் பெரியோர்.

## மடங்களோடு கொண்ட தொடர்பு

திருவாவடுதுறை ஆதீனமடம், தருமபுர ஆதீனமடம், திருப்பனந்தாள் காசிமடம், பேரூர். கௌமாரமடம், திருவாமாத்தூர் கௌமாரமடம் முதலிய மடங்களோடு அடியேனுக்குத் தொடர்புண்டு. திருவாவடுதுறை, தருமபுரம், காசிமடம் முதலிய மடங்களைச் சேர்ந்த மடாதிபதிகள் பட்டாடை வழங்கியும், பரிசளித்தும் என்னைப் பாராட்டியுள்ளனர். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பல ஆண்டுகளுக்கு முன் தாம்பரம் வந்திருந்த போது, நான் அவர்களைச் சந்தித்

தேன். அப்போது அவர் முன்பு, எங்கள் வீட்டு சிறுவர், சிறுமியர் பன்னிரு திருமுறைகள் ஓதினார்கள். அதைக்கேட்டு சுவாமிகள் மகிழ்ந்து, எங்களுக்கெல்லாம் நல்லாசி கூறினார் கள். நான் ஒருமுறை குடும்பத்தோடு சென்று, சுவாமிகளைக் காஞ்சிபுரம் மடத்தில் சந்தித்து, நல்லாசி பெற்றுள்ளேன். ஸ்ரீ சங்கராச்சாரிய ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் (புதுப் பெரியவாள்) தாம்பரத்திற்கு வந்திருந்தபொழுது, எங்கள் வீட்டுக் குழந்தைகள் அவர் முன்பு பன்னிரு திருமுறை ஓதினர். அதைக்கேட்டு சுவாமிகள், அவர்களை வாழ்த்தி எங்களுக்கு நல்லாசி கூறினார். சில ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமிகள் காஞ்சிபுரத்திலுள்ள அவரது மடத்திற்கு வரும் படி ஓர் அன்பர் மூலம் தெரிவித்தார்கள். நான் அவ்வாறே சென்று, சுவாமிகளைக் கண்டேன். அப்போது தமிழ்நாடு அரசினர் தமிழ்ப்பாடத்திட்டக் குழுவின் தலைவனாகப் பணி யாற்றி வந்தேன். சுவாமிகள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு நீதிமத போதனைகளை எவ்வாறு வழங்கலாம் என்பதைப்பற்றி என்னுடைய கருத்தினைக் கேட்டார்கள்; சுவாமிகளும் தங்கள் மடத்தின் சார்பில் ஒன்றுவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரை நீதிமதபோதனைப் பற்றிய புத்தங்களைப் பதிப்பித்து வருவதாகவும் கூறினார்கள்.

1965 - ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் சைவ சித்தாந்த மாநாடு நடந்த போது, சூரியனார் கோவில் ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரதேசிகர் மூலம் நானும், என் மனைவியும் சமயத் தீட்சை பெற்றுக் கொண்டோம். அது முதற்கொண்டு, நான் சைவ சமய முறையில் சந்தியாவந்தனம் செய்து வருகின்றேன். இதற்கு முன்பு எனக்குத் திருமண காலத்தில் உபநயனம் நடந்த பொழுது, புரோகிதர் ஸ்மார்த்த முறையில் வழங்கிய மந்திர முறையில் சந்தியாவந்தனம் செய்து வந்தேன். என் தந்தையார் ஒரு நாளைக்கு மூன்று

முறை சந்தியாவந்தனம் செய்வதுண்டு. நான் ஒரு நாளைக்கு இருமுறை தான் சந்தியாவந்தனம் செய்கிறேன். சில நாளைக்கு ஒரு முறையும் சந்தியாவந்தனம் செய்வதுண்டு. சந்தியா வந்தனம் செய்வதாலும், அதன்பிறகு தியானம் செய்வதாலும் நமக்கு மன ஒருமைப்பாடு ஏற்படுகின்றது.

## குடும்ப வழிபாடு

எங்கள் வீட்டில் குடும்பவழிபாடு நடைபெறுவதுண்டு. நானும், என் மனைவியும், பிள்ளைகளும், மருமகளும், பேத்தி மார்களும் ஒன்ருகச் சேர்ந்து, இரவு 7-30 மணிக்குப் பன்னிரு திருமுறைகளைப் பண்களோடு ஓதி குடும்பவழிபாடு செய்து வருகின்ருேம். காலையில் எங்கள் குழந்தைகள் பன்னிரு திரு முறையைச் சொல்லிவிட்டுத்தான், பால் குடிப்பார்கள். எங்கள் வீட்டில் காலையில் பூசை செய்யும் போது. நடராசப் பெருமானுக்கு பால் நைவேத்தியம் ஆன பிறகுதான, எல்லோருக்கும் காப்பி வழங்கப்படும். நான் பெரும்பாலும் காலையில் காப்பி சாப்பிடுவதில்லை; பால் தான் சாப்பிடுவேன். பிரதோஷம், சஷ்டி, கிருத்திகை, அமாவாசை, பௌர்ணமி, திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, வருடத்தில் நடராசருக்கு நடைபெறும் ஆறு அபிஷேக நாள், நால்வர் திருசட்சத்திரங்கள் முதலிய நாட்களில் நானும், என் குடும்பத்தாரும் விரதமிருப்பதுண்டு.

## தில்லைத் திருப்பணியில் பங்கேற்றல்

தில்லைத் திருப்பணிக்குழுவினர் திருப்பணி செலவுக்காகப் பிறந்தநாள் அர்ச்சனை திட்டமொன்று ஏற்படுத்தியுள்ளார் கள். அதன்படி ஒருவர் தன் பிறந்தநாள் அர்ச்சனைக்கு 125 ரூபாய் அனுப்பினல், அதில் 100 ரூபாய் திருப்பணிக்கும், 10 ரூபாய் நடராசத் திருவுருவம் பதித்த பதக்கத்திற் (டாலருக்)

கும், ஸ்ரீ நடராசருக்கு சகஸ்நாம அர்ச்சனைக்கும், ஸ்ரீசிவகாமி அம்மையாருக்கு அஷ்டோத்தர அர்ச்சனைக்கும் ரூபாய் 15 செலவு செய்கின்றனர். தற்போது வெள்ளிவிலை அதிகமாக இருப்பதால், 10 ரூபாய்க்கு நடராசர் பதக்கம் கொடுக்க இயலாமையினால், அதை நிறுத்திவிட்டு, ரூபாய் 114 கொடுத்தால் போதுமெனத் திட்டம் செய்துள்ளார்கள். எனக்கும் என் மனைவிக்கும், என் மூத்தமகனுக்கும் வரும் பிறந்தநாள்களில், அர்ச்சனைக்காக நாங்கள் பல ஆண்டுகளாக ரூபாய் 125 அனுப்பியிருந்தோம். இப்போது புதிய திட்டப்படி ரூபாய் 114 அனுப்பி வருகிறோம். என்னுடைய பிறந்தநாள் அர்ச்சனை ஆண்டுதோறும் எப்போதும் நடைபெற வேண்டி அதற்குரிய வைப்புத் தொகையாக ரூபாய் 1140 திருப்பணிக் குழுவினரிடம் செலுத்தி விட்டேன். சென்னைக் கந்த கோட்டத்தில் பிறந்தநாள் அர்ச்சனையை வேறுவகையாகச் செய்கிறார்கள். ஒருவர், தன் பிறந்தாள் அர்ச்சனைக்காக முருகப் பெருமானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதற்கு முதலில் ரூபாய் 275 செலுத்திவிட்டால், அது முதற்கொண்டு அவர் பிறந்தநாளில், அவருக்கும், அவருக்குப் பிறகு அவர் குடும்பத்தாருக்கும் எப்போதும் அந்த அர்ச்சனையைச் செய்து கொள்ளலாம் என்ற திட்டத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். அவ்வாறே கந்தகோட்டத்தில் பிறந்த நாள் அர்ச்சனையைக் குளத்தங்கரை விநாயகருக்குச் செய்வதானால், ரூபாய் 295 கட்டி விடவேண்டும். நாங்கள் இத்திட்டத்தில் கலந்து கொண்டுள்ளோம். என் பிறந்த நாளில் முருகப்பெருமானுக்கும், என் மனைவியின் பிறந்தநாளில் குளத்தங்கரை விநாயகருக்கும் பிறந்தநாள் அர்ச்சனை செய்யப்பட்டு வருகின்றது.

## தாம்பரத்தில் வாழ்க்கை

சென்னையிலிருந்து கிறித்துவக் கல்லூரி 1937ஆம் ஆண்டு தாம்பரத்திற்கு மாற்றப்பட்டது. ஆகவே, நான் 1937ஆம்

ஆண்டு சென்னையை விட்டு, தாம்பரத்தில் குடி புகுந்தேன். சென்னைக் கிறித்துவக் கல்லூரி ஆசிரியர்கள் தங்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தினர். இச் சங்கத்தார் அரசாங்கத்தார் இடமிருந்து நிலங்களை விலைக்கு வாங்கி, ஒவ்வோர் ஆசியருக்கும் அரை ஏக்கர் அல்லது ஓர் ஏக்கர் நிலம் விலைக்குக் கொடுத்தனர். நான் அரை ஏக்கர் நிலம் வாங்கிக்கொண்டு, கல்லூரி ஆசிரியர் கூட்டுறவு சங்கத்தின் வாயிலாகக் கடன்தொகையைப் பெற்று, 1939-ல் ஒரு வீடு கட்டினேன். அந்த வீட்டிற்குச் "சிவனகம்" எனப் பெயர் வைத்துள்ளேன்.

அந்தக் காலத்தில் தாம்பரத்தில் பிரதோஷம் நடைபெறும் சிவன் கோயில்கள் இல்லாமையால், நான் பிரதோஷ தரிசனத்துக்காக சென்னை முத்தியாலுப்பேட்டை ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயத்திற்குச் சென்று வந்தேன். பின்னர், சில ஆண்டுகள் சைதாப்பேட்டைக்குச் சென்று, அங்குள்ள காரணீசுவரர் கோவிலில் பிரதோஷ தரிசனம் செய்து வந்தேன். பிரதோஷ தரிசனம் செய்வது என் வாழ்க்கைக் குறிக்கோள்களுள் ஒன்றாகும்.

## தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அறங்காவலர்

1946-ஆம் ஆண்டு கிழக்குத் தாம்பரம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஸ்ரீ கந்தப்பெருமானார் திருக்கோவில் கட்டப்பட்டது. முதன் முதல் விநாயகர், முருகர் திருமேனிகள் மட்டும் அக்கோவிலில் அமைக்கப்பட்டன. அக்கோவில் தொடங்கிய நாள் முதல் அக்கோவிலின் அறங்காவலர் குழுவில் பல ஆண்டுகள், நான் உறுப்பினனாகவும், தலைவனாகவும் பணியாற்றினேன். அக் கோவிலில் சிவலிங்கம், அம்பாள், நால்வர், நவக்கிரகம், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியோரின் திருவுருவங்களும், பிரதோஷ நாயகர், நடராசர், சிவகாமி, சுக்கிரவார அம்மன், முருகர், சமயாசாரியர் நால்வர் முதலிய உற்சவத் திருவுருவங்

களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோவிலில் பட்டா பிராமர்சன்னதியும்உண்டு. இவைகளையெல்லாம் செய்வதற்கு அறங்காவலர் குழுவில் ஒருவராக இருந்த திரு. ச. நடேச முதலியார் என்பவர் எனக்கு மிகவும் துணைபுரிந்தார். 1967ம் ஆண்டில் நான் அறங்காவலர் குழுவின் தலைவனாக இருந்த காலத்தில் இந்து அறநிலையத் துறையினரிடமிருந்து கிடைத்த ரூபாய் 5000த்தையும் பிற அன்பர்கள் அளித்த நன்கொடையையும் கொண்டு கும்பாபிஷேகத்தை அத்திருக்கோவிலில் நடத்தினேன். 1973-ஆம் ஆண்டில் அத்திருக்கோவிலில் சந்திரசேகரர் உற்சவத்திருவுருவத்தை என் சொந்த செலவில் செய்வித்து, அதற்குக் கும்பாபிஷேகமும் செய்து முடித்தேன். அக்கோவிலில் இரண்டு கும்பாபிஷேகங்கள் செய்து முடித்த பின்னர், அறங்காவலர் குழு உறுப்பினர்களுள் ஒற்றுமையில்லாமல், நான் அக்குழுவின் தலைமைப் பதவியிலிருந்து விலகிவிட்டேன். எனினும், அத்திருக்கோவிலில் பிரதோஷம், பங்குனி உத்திரத் திருக்கல்யாணம், கந்தசஷ்டி-4-ஆம் நாள், நவராத்திரி 10-ஆம் நாள் (விஜயதசமி), கார்த்திகை சோமவாரம் சங்காபிஷேகம், வைகாசி விசாகம் முதலிய உற்சவங்களை நாங்கள் இன்றும் நடத்தி வருகின்றோம். எங்கள் வீட்டுத்தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் கொண்டு, மாலைதொடுத்து, நாள்தோறும் அக்கோவிலுக்கு நாங்கள் கொடுத்து வருகின்றோம்.

சென்னை முத்தியாலுப்பேட்டை, லிங்கி செட்டிவீதியிலுள்ள ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயத்தில், வசந்த உற்சவம்-7-ஆம் நாள், பிரம்ம உற்சவம் 13-ஆம் நாள், ஆனி, மார்கழி தவிர நடராசருக்குரிய மற்ற நான்கு அபிஷேகங்கள், சேக்கிழார் திருநட்சத்திரம், ஐப்பசி பூரத்திருக்கல்யாணம் முதலிய உற்சவங்களை நாங்கள் நடத்தி வருகின்றோம்.

மேலூரில், ஸ்ரீ திருவுடை அம்மன் சமேத ஸ்ரீ மணங்கீஸ்வரர் திருக்கோவிலில் எங்கள் மாமனார் செய்து வந்த

கார்த்திகை மூன்றும் சோமவார உபயத்தை, நாங்கள் இன்றும் ஆண்டுதோறும் செய்து வருகின்றோம். மேலே கூறப் பட்ட திருக்கோவில்களில் நாங்கள் செய்து வரும் உற்சவங்கள் எனக்குப் பிறகும் எப்பொழுதும் நடைபெறுவதற்கு வேண்டிய வைப்புநிதி (fund)யை நான் ஏற்படுத்தியுள்ளேன். ''வாழ்க்கையும் சமயமும்'' ஒன்ருக இருக்க வேண்டு மென்பதும், சைவசமய கவிராயர் நால்வர் காட்டிய நன்னெறி வழியே, நம் வாழ்க்கையை நடத்தவேண்டுமென்பதும் அடியேனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகும். இக்குறிக் கோள் முற்றிலும் நிறைவேறுவதற்குத் திருவருள் கூட்டுவதாக!

7

# குடும்பம்

எனது அருமைத் தந்தையார் பூரிப்பாக்கம் வேலு செட்டியார் என்பவருக்கும், என் அருமைத் தாயார் இராஜம் மாள் என்பவருக்கும் நான் 6-வது மகவாகப் பிறந்தேன். என்னுடைய அண்ணன் திரு. பூ. மல்லிகேசுர செட்டியார். நாங்கள் இருவரும் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி யிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் படித்தோம். 70ஆண்டு களுக்கு முன் பேரிசெட்டியார் குலத்தில், எங்கள் பிரிவில், என்னுடைய பாட்டனுர் பூ. பார்த்தசாரதி செட்டியார் தான் ஆங்கிலம் கற்றவராக விளங்கினுர். எங்கள் குலப் பிரிவில், என் தந்தையார் தான், முதன் முதல் மெட்ரி குலேஷன் தேர்வில் தேறியவர். அவ்வாறே இளங்கலைத் (பி. ஏ., B.A.) தேர்வில் என் அண்ணுவும், முதுகலைத் (எம்.ஏ , M. A.) தேர்வில் நானும், எங்கள் குலப்பிரிவில் முதன் முதல் பட்டம் பெற்வர்களாக விளங்கினேம். அக் காலத்தில் எங்கள் குலத்தில் பெரும்பாலும், பலர் வாணிகத் துறையில் ஈடுபட்டிருந்தனர், நான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்று,சென்னைக் கிறித் துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பதவிபெற்ற பின்னர், எனக்கு 1937-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் திருமணம் நடந்தேறியது. எனது அம்மான் பூ சுந்தரம் செட்டியாரின் நான்காவது மகளாகிய நவநீதம் என்ற நங்கை எனக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தாள். அவள் எட்டாம் வகுப்பு வரையில் கல்வி பயின்றவள்; நல்லபண்புகள் அமையப்பெற்றவள். எனவே, எங்கள் இல்வாழ்க்கை மிக நல்லமுறையில் நடைபெற்று

வருகின்றது. அவள் தன் இளமைப் பருவத்தில் தேவார சபையில் சேர்ந்து படித்ததால், பன்னிருதிருமுறை, திருப்புகழ் இவைகளையெல்லாம் பண்முறைப்படி பாடும் திறமை பெற்றவள். நான்பதிப்பித்த புத்தகங்களின் அச்சகத்திலிருந்து அச்சுத்தாள்கள் வீட்டிற்கு வந்தால், அவைகளைத் திருத்தும் பணியில் ஈடுபட்ட போது, அவள் எனக்குப் பெரிதும் துணையாக இருப்பதுண்டு. இறைவன் திருவருளால் எனக்கு சிவகாமசுந்தரி, புனிதவதி, ஞானப்பூங்கோதை என்ற மூன்று பெண்களும், பூ. ஆ. சிவகுமாரன், பூ. ஆ. நடராசன் என்ற இரண்டு பிள்ளைகளும் உள்ளனர்.

''தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்'' (திருவள்ளுவர்)

என் மூத்தமகள் சிவகாமசுந்தரி என்பவள் சென்னைப்பல் கலைக்கழக இன்டர்மீடியட் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்றவள். அவளுக்கும் திரு. M. T. செங்கல்வராயன், பி.காம்., எப் சி.ஏ. என்பவருக்கும் 1956-ல் திருமணம் நடைபெற்றது. திரு. செங்கல்வராயன் என்பவர் சி. ஏ. த் (Chartered Accountant) தேர்வில் வெற்றி பெற்று, தனிப்பட்ட முறையில் ஒரு தணிக்கையாளராகப் (Auditor) பணிபுரிந்து வருகிறார். அவருக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உள்ளனர். அவருடைய தந்தையார் திரு. எம். தியாகராய செட்டியார் என்பவர் திருத்தணிகை முருகனிடத்தில் இடையறுப் பேரன்பு கொண்டவர். அவரது குடும்பம் ஒரு சிறந்த சைவக் குடும்பமாகும்.

என் இரண்டாம் மகள் புனிதவதி எஸ். எஸ். எல். சி, தேர்வில் வெற்றி பெற்றவள். அவளுக்கும், திரு. M. K. அண்ணாமலை, பி. ஏ. என்பவருக்கும், 1960-ஆம் ஆண்டு திருமணம் நடை பெற்றது. திரு. அண்ணாமலை அவர்கள் அரசாங்கத் தொழில் வாணிகதுறை நிறுவன அலுவலகத்தில்

(Tamilnadu, Industries & Commerce) ஒரு சிறந்த பதவியில் பணிபுரிகிறார். அவருக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் உள்ளனர், தந்தையார் திரு. M. கந்தசாமி செட்டியார் என்பவர் சிறந்த சிவபக்தர். இந்தக் குடும்பமும் சிறந்த சைவக் குடும்பமாகும். இவர்கள் சென்னை, சிந்தாதிரிப் பேட்டை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் கோவிலில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தி பல உற்சவங்கள் செய்து வருகிறார்கள்.

என் மூன்றும் மகள் ஞானப்பூங்கோதை எஸ் எஸ்.எல் சி. தேர்வில் வெற்றி பெற்றவள். அவளுக்கும், திரு. V. சரவணம், பி.காம். என்பவருக்கும் 1966-ஆம் ஆண்டில் திருமணம் நடை பெற்றது. அவர் சென்னை ரிசர்வ் வங்கியில் (Reserve Bank) பணிபுரிந்து வருகிறார். அவருக்கு மூன்று பெண்களும், ஒரு பிள்ளையும் உள்ளனர். அவரது குடும்பமும் சைவக் குடும்ப மாகும்.

என் மூத்த மகன் பூ. ஆ. சிவகுமாரன், பி. ஏ, எப். சி. ஏ. க்கும், திரு. முனிவேல் செட்டியார் மகள் சகலகலாவல்லிக்கும் 1969-ஆம் ஆண்டில் திருமணம் நடை பெற்றது என்னுடைய மருமகள் சென்னைப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் (P. U. C.) வெற்றி பெற்றவள் திரு. முனிவேல் செட்டியார் குடும்பமும் சிவபக்தியுள்ள குடும்ப மாகும். என் மூத்த மகனுக்கு மூன்று பெண்கள் உள்ளனர். அவன் சில ஆண்டுகளாக சென்னையில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (Life Insurance Corporation) நிர்வாக அலுவல ராகப் பணிபுரிந்து வந்தான். தற்போது அவன் ஆயுள் காப் பீட்டுக் கழகத்தின் விருதுநகர் கிளையின் மேலாளனாகப் (Manager) பணிபுரிந்து வருகின்றான்.

என் இளையமகன் பூ ஆ நடராசன், பி. காம்., ஏ. சி. ஏ. க்கும், டாக்டர். எம். சுவாமிநாதன் என்பவரின்

இரண்டாம் மகளான ஜெய்லட்சுமி என வழங்கும் உஷா ராணிக்கும் (B Sc.), 1981-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் ஐந்தாம் நாள், சென்னைக் கந்தகோட்ட ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான திருமண மாளிகையில் திருமணம் நடை பெற்றது. டாக்டர். சுவாமிநாதன் என்பவரின் குடும்பமும், முருகபக்தியுடைய சிறந்த குடும்பமாகும். என் இளையமகன் நடராசன், சென்னை "இந்து பத்திரிக்கை" அலுவலகத்தில் கணக்கு உயர் அலுவலராகப் (Accounts Officer) பணிபுரிந்து வருகின்றான். என் மூன்று மகளிரும் இரண்டு பிள்ளைகள் மூல மாக எனக்கு ஐந்து பேரன்மார்களும், ஒன்பது பேத்திமார் களும் உள்ளனர். தில்லை அம்பலவாணர் திருவருளால் என் இல்லற வாழ்க்கை, பொருளாதாரத்துறையில் குறைபாடின்றி நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. எல்லாம் இறைவன் திருவருளே!

திருச்சிற்றம்பலம்

# பிழை திருத்தம்

| பக். | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 18 | நினைவுகூறுவோமாக | நினைவுகூர்வோமாக |
| iv | 7 | பதிப்புக்கு | பதிப்பிக்கும் |
| | 7 | பெறுமபேருக | பெரும்பேருக |
| vi | 15 | ொறி | நெறி |
| viii | 6 | பேரருளாடனை | பேரருளாளனை |
| ix | 7 | முத்தித்தரும் | முத்தி தரும் |
| 5 | 23 | அப்பாண்டை ராஜன் | அப்பாண்டி ராஜன் |
| 13 | 10 | பண்டித | பண்டிதமணி |
| 20 | 4 | நான்காம் வகுப்பு | நான்காம் படிவம் |
| 24 | 20,22 | Senate, Senators | Senatus |
| 25 | 10 | அவிஞர் | அறிஞர் |
| 31 | 27 | பெண்கன் | பெண்கள் |
| 34 | 22 | கருத்துடைவனக | கருத்துடையவனக |
| 35 | 28 | தேவர்வாளராக | தேர்வாளராக |
| 61 | 1 | சகஸ்நாம | சகஸ்ரநாம |
| 62 | 5 | ஆசியருக்கும் | ஆசிரியருக்கும் |
| 65 | 14 | பெற்வர்களாக | பெற்றவர்களாக |